வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 22.08.2024 வியாழக்கிழமை | இதழ் : 235 | பக்கங்கள் : 12

# சஜித் ஆட்சிக்கு வந்தால் கோட்டா ஆட்சி மலரும்!

## நேற்று எம்.பி. பதவியைத் துறந்த தலதா அத்துக்கோரள எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 22

**"ரணிலும், சஜித்தும் இணைந்து நாட்டை முன்னேற்றக்கூடிய ஒரு திட்டத்தை நான் உட்பட்ட தரப்பு முன்வைத்தபோதும் அது சாத்தியப்பட வில்லை. சஜித் ஆட்சிக்கு வந்தால் கோட்டாவின் ஆட்சியை போன்றதாகி விடும். கோட்டாவின் ஆட்சி எப்படி வீழ்ந்தது என்பதை சஜித் பிரேமதாஸ அறிய முயலவேண்டும்."**

- இவ்வாறு நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள.

அவர் தனது உறுப்பினர் பதவியை நேற்று இராஜனாமா செய்தார். பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

அதன்போது விசேட உரையை நிகழ்த்திய போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எம்முடைய தாய்க் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதித்தலைவரும் அரசியில் எதிரிகளாகியுள்ளனர். தற்போது இருவரும் ஜனாதிபதியாக போட்டியிடுகின்றனர். அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய பின்னணியில் இவ்வாறு பிளவுபட்டுள்ளமையினால் எந்த சாராருடனும் இணைந்து செயற்பட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அவர்கள் இருவரும் நாடு 11

## பதவியைத் துறந்தார் தலதா அத்துக்கோரள!



கொழும்பு, ஓக. 22

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள தனது பதவியை இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளதாக நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.


பாராளுமன்றத்தில் உணர்வுபூர்வமான உரையை ஆற்றிய அவர், ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபடுவதில் தனக்கு விருப்பமில்லை என 11

## சுரேஷ், மௌலானாவுக்கு அமைச்சுப் பதவிகள்!

கொழும்பு, ஓக. 22

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ் இராஜாங்க அமைச்சராகவும் அலிஸா ஹிர் மௌலானா அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சராகவும் நேற்று புதன்கிழமை நியமிக்கப்பட்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற 11



## யாழில் கடும் காற்றால் 3 குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை வீசிய கடும் காற்றால் மூன்று குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. அத்துடன், கோயில் ஒன்றும் மரம் விழுந்ததில் சேதமடைந்தது.

நேற்று வீசிய கடும்காற்றால் குருநகர் - ஐந்து மாடி குடியிருப்பில் கூரை பறந்ததில் மூன்று குடும்பங்களை சேர்ந்த 11 பேர் பாதிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மனிதாபிமான உதவிககளை வழங்கியது.

இதேவேளை, பருத்தித்துறை - புலோலி மேற்கில் நாகதம்பிரான் கோயில்மீது பனைமரம் முறிந்து விழுந்ததில் அது சேதமடைந்தது. (ஐ)

## தமிழ் பொது வேட்பாளர் நோக்கத்துக்காக களத்திலும் புலத்திலும் கைகோப்போம்!

### மூத்தபோராளி காக்கா அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 22

எல்லாவிதத் தடைகளையும் துரோகங்களையும் தாண்டி தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் முன்னோக்கிச் செல்வோம். புலம்பெயர் உறவுகளும் தாயகத்திலுள்ளோரும் கைகோத்து இதனை சாத்தியமாக்குவோம் - இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் பசீர் காக்கா என்று அறியப்பட்ட மு. மனோகர்.

அத்துடன், தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனின் சின்னமான சங்குக்கு வாக்களிக்கத் தவறாதீர்கள். மாவீரர் குடும்பங்கள், முன்னாள் போராளிகள், போராட்டத்துக்கு உறுதுணையாக இருந்த மக்கள் இதனை தேசிய கடமையாக உளமார ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

நேற்று அவர் யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் நேற்று தெரிவித்த 11

## சுயநிர்ணய உரிமை தமிழருக்கு அவசியம்!

### சிறிதுங்க ஜயசூரிய கூறுகிறார்

கொழும்பு, ஓக. 22


தேசிய இனப்பிரச்னைக்கு அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் போதுமான தீர்வாக அமையாது. தமிழ் மக்களுக்கு தம்மைத் தாமே ஆளக்கூடிய சுயநிர்ணய அடிப்படையில் தீர்வு அவசியம் 11

## வவுனியா வைத்தியசாலையில் பிறந்த குழந்தை உயிரிழப்பு!

### தந்தை பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, ஓக. 22

வவுனியா வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவரின் அலட்சியத்தினால் தனது குழந்தை இறந்துள்ளதாக, குழந்தையின் தந்தையினால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. 11






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டலாய் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகமும் அபிஷேகமும்

வடமராட்சி, ஒக. 22
வடமராட்சி கிழக்கு, முள்ளியான் மண்டலாய் பிள்ளையார் ஆலயத்தின் வசந்த மண்டப கும்பாபிஷேகமும் மணவாளக் கோல அபிஷேகமும் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9 மணி முதல் 9.30 மணி வரையுள்ள கன்னி லக்கின சுப முகூர்த்த வேளையில் வசந்த மண்டப கும்பாபிஷேகமும், முற்பகல் 11.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரையுள்ள சுப வேளையில் மணவாளக் கோல அபிஷேகமும் நடைபெறவுள்ளது.

இதேவேளை, இன்று இரவு 7.30 மணி முதல் நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 2.30 மணி வரை கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என்றும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ஐ-2)

## 'சிறுபொறி' சஞ்சிகையின் ஓராண்டு நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக. 22
கே. ஏ. எஸ். சத்தியமனை நூலகத்தின் வெளியீடாக மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு வெளிவருகின்ற "சிறுபொறி" சஞ்சிகையின் ஓராண்டு நிறைவு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சுழிபுரத்தில் அமைந்துள்ள கே. ஏ. எஸ். சத்தியமனை நூலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அதிதிகளாக வலி. மேற்கு பிரதேச செயலர் திருமதி கவிதா உதயகுமார், வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செல்லத்துரை பிரணவநாதன், சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் கோட்டங்களின் கல்விப் பணிப்பாளர் சூ. நோபேட் உதயகுமார் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த விழாவில் ஓவியப் போட்டி, திருக்குறள் போட்டி என்பனவற்றில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கலும் சிறுபொறி 5 இதழ் வெளியீடும் கலை நிகழ்வுகளும், மாவை நித்தியானந்தனின் எழுத்துருவில் சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் "முட்டை" நாடக ஆற்றுகையும், ஓவியக் கண்காட்சியும் நடைபெறவுள்ளன. (ஐ)

## கலை நிகழ்ச்சிகள்!

யாழ்ப்பாணம், ஒக. 22
இளவாலை - வித்தகபுரம் செல்லப்பா குட்டிச்சுவாமிகள் சிவாலயம் விசாலாட்சி அம்பிகை சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் மகா கும்பாபிசேகத்தை ஒட்டி கலைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இன்று வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் கலாபூஷணம் சி. சிவஞானராஜாவின் பண்ணிசைக் கச்சேரி, கொல்லங்கலட்டி அறநெறி பாடசாலை மாணவிகளின் பரத நாட்டியம், சட்டத்தரணி நா. அரியபுத்திரனின் பேருரையும் நடைபெறவுள்ளன. (ஐ)

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஒக. 22
நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான சண்முகவிலாச மண்டபத்தில் சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகிறது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார்.

இதைத் தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை சைவப்புலவர் திருமதி சண்முகவடிவு தில்லைமணி "சைவ சமய வளர்ச்சியில் மகளிர்" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஒக. 22
சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

19ஆவது தொடராக நடக்கும் இந்த சொற்பொழிவு நவாலி தெற்கு நாகராஜா இராஜேஸ்வரி அம்பாள் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தை தொடர்ந்து சொற்பொழிவை இளம்சைவப்புலவர் க. கயிலைவாசன் "மாணிக்கவாசகரும் திருத்தசாங்கமும்" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஒக. 22
சிறுப்பிட்டி மேற்கு நாக தம்பிரான் ஆலயத்தின் பெருந் திருவிழா நாட்களில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறவுள் ளது.

ஆலய பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் திங்கட்கிழமை வரை தினமும் மாலை 6.00 மணிக்கு இந்த சொற்பொழிவு நடைபெறும்.

சிவநெறிப்பிரகாசர் க. நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த சொற்பொழிவில் சைவப்புலவர்கள் செ. த. குமரன், க. கைலநாதன், ச. முகுந்தன், பொன். சந்திரவேல், சி. கா. கமலநாதன் ஆகியோரும் இளம்சைவப்புலவர்கள் ச. நவநீதன், க. கயிலைவாசன், நித்திய பாபுதரன் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர்.

## கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகளின் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

கிளிநொச்சி, ஒக. 22
கிளிநொச்சி மாவட்டத்தில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகளுக்கான கூட்டம் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று காலை 9.30 க்கு ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் ஆரம்பமானது.

மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றதுடன் நடப்பாண்டிற்கான இரண்டாவது கூட்டமாக அமைந்தது. தற்போது அரச சார்பற்ற நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் திட்டம் மற்றும் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் நாற்பதுக்கும் மேற்பட்ட சர்வதேச மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் 30 பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இக் கூட்டத்தில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், கரைச்சி பிரதேச செயலாளர், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், திட்டத்துடன் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட இணைப்பாளர், உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (அ)

## ஜனாதிபதிக்கு முறையிட்ட மாணவி; துன்புறுத்திய ஆசிரியருக்கு மறியல்!

கொழும்பு, ஒக. 22
வார்த்தைகளால் துன்புறுத்திய ஆசிரியர் தொடர்பில் மாணவி ஒருவர் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இதைத் தொடர்ந்து ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் பொலிஸார் ஆசிரியரை கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மட்டக்களப்பில் பெண்கள் பாடசாலை ஒன்றில் உயர்தரத்தில் கல்வி கற்றுவரும் மாணவி ஒருவருக்கு ஆசிரியர் ஒருவர் கடந்த 5 மாதங்களாக தகாத வார்த்தைகளை பயன்படுத்தித் துன்புறுத்தி வந்துள்ளார்.

இது தொடர்பில் யாரிடமேனும் முறையிடக்கூடாது என்றும் தன்னை எதிர்த்தால் மாவட்டத்திலேயே இருக்க முடியாது எனவும் அந்த ஆசிரியர் மாணவியை அச்சுறுத்தியுள்ளார்.

ஆசிரியரின் தகாத செயல்பாடுகள் தொடர்பில் மாணவியின் பெற்றோர் பாடசாலையின் பிரதி அதிபரிடம் கடிதம் மூலம் முறையிட்டனர். ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், ஆசிரியர் தொடர்ச்சியாக மாணவியை பாலியல் வார்த்தைகளை பயன்படுத்தி இழிவு படுத்தியுள்ளார்.

இதைத் தொடர்ந்து மாணவி ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி பொலிஸாருக்கு பணித்த தன்பேரில் நடத்தப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து ஆசிரியரை பொலிஸ் நிலையம் வருமாறு பொலிஸார் அழைத்துள்ளனர். ஆனால், ஆசிரியர் பொலிஸ் நிலையம் செல்லாது தலைமறைவாகியிருந்தார். இந்த நிலையில், அவர் கைது செய்யப்பட்டார். மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட ஆசியரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று!

யாழ்ப்பாணம், ஒக. 22
நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறிலசிறீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று வியாழக்கிழமை மூலாய் பதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான பஜனை குழுவினரின் நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஒக. 22
நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறிலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவசிறீ இ. குமாரசுவாமி குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்ப்பாண பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் மற்றும் ஜப்பான் கச்சுவின் பல்கலைக்கழக முன்னாள் ஆய்வு பேராசிரியர் திருமதி சண்முகதாஸ் மனோன்மணி ஆகியோர் பிரதம அதிதிகளாகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைப்பீட இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய அதிபர் கோபாலு பத்மநாதன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் பங்கேற்பர்.

இதில், வீரகத்தி பிள்ளையார் அறநெறி பாடசாலை, ஆதி ஞான வைரவர் அறநெறி பாடசாலை , கொழும்புத்துறை சந்திரசேகரப்பிள்ளையார் அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக கீதவாஹினி இசைக் கல்லூரி மாணவர்கள் வழங்கும் பல்லியம் நிகழ்வும் நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

## வென்னப்புவ பகுதியில் நான்கு பஸ்கள் தீக்கிரை

கொழும்பு, ஒக. 22
வென்னப்புவ பகுதியில் 4 பஸ்களுக்கு தீ வைக்கப்பட்டுள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பழுதுபார்க்கும் நிலையமொன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பஸ்களுக்கே தீ வைக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் 4 பஸ்களும் தீக்கிரையாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பழுது பார்க்கும் நிலையத்திற்கு அருகிலிருந்த சி.சி.ரி.வி கமெராவை சோதனையிட்டபோது, நபர் ஒருவர் குறித்த பஸ்களுக்கு தீ வைத்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தினால் சுமார் 3 கோடி ரூபாய் சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
22.08.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், ஆவணி 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# தமிழ் அரசு கட்சியின் நிலைப்பாடுதான் என்ன?

தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், தமிழ்ப் பொது வேட்பாளர் தேவையற்ற விடயம் என்பதில் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் தெளிவாக இருக்கின்றனர் என்றும் - இது இன்னொரு தென்னிலங்கை வேட்பாளரை வெற்றிபெறச் செய்வதற்கான முயற்சி எனவும் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், மறுபுறம் அந்தக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, புதிய தலைவருக்கான தெரிவில் அதிக வாக்குகளில் வெற்றி பெற்றவரான சிறீதரன் ஆகியோர் தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரித்து வருகின்றனர். உண்மையில், தமிழ் அரசுக் கட்சிக்குள் என்ன நடக்கின்றது? - அது ஒரு கட்சியாக இருக்கின்றதா? - ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைப் பேசும் கட்சியாக இருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் வடக்கு - கிழக்கில் அதிகம் உள்ளுக்குள் பலவீனமாக இருக்கின்ற கட்சியாக தமிழ் அரசுக் கட்சியே இருக்கின்றது.

தமிழ்ப் பொது வேட்பாளர் தென்னிலங்கையில் இன்னொருவரை வெற்றிபெறச் செய்வதற்கான செயல்பாடு என்றால் - அந்த வேட்பாளர் யார்? அப்படியானால் அந்த வேட்பாளரின் வெற்றிக்குப் பதிலாக தமிழ் அரசுக் கட்சி பிறிதொருவரின் வெற்றியை விரும்புகின்றது என்பதுதானே பொருள்? அவ்வாறாயின், அந்தத் தென்னிலங்கை வேட்பாளர் யார்? தமிழ் அரசு கட்சி ஏன் அதனை வெளிப்படையாக மக்களிடம் கூறும் துணிவற்று இருக்கின்றது?

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பான உரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டபோது ஆரம்பத்தில் இது தென்னிலங்கை இனவாத சக்திகளின் திரைமறைவு வேலைத்திட்டம் என்று சிலர் கூற முற்பட்டனர். பின்னர், இது ரணிலுக்கான வேலைத்திட்டம் என்று கூற முயன்றனர் - பின்னர் இது இந்தியாவின் வேலைத்திட்டம் என்று சிலர் கூற முற்பட்டனர். ஆனால், தற்போது இது எவருக்கான வேலைத்திட்டமும் அல்ல, தமிழ்த் தேசிய அரசியலை புதிய அரசியல் சூழலுக்கு ஏற்பப் புடம்போடும் அதேவேளை, தமிழ் மக்களுக்கு ஒரு தேசிய இனப்பிரச்னை இல்லை என்று நிறுவ முற்படும் தென்னிலங்கையின் அரசியல் சமூகத்தின் முயற்சியை தோற்கடிப்பதற்கான ஒரு நகர்வாகவும் இருக்கின்றது.


தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தர்க்கரீதியில் எதிர்க்கும் முயற்சியில் அனைவருமே தோற்றுவிட்டனர். தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை நிராகரிப்பதற்கு எந்தவொரு பதிலும் இல்லாமல் சுமந்திரன் அணியினர் தடுமாறிக் கிடக்கின்றனர். இந்த நிலையிலேயே, அந்த அணியின் முக்கியமான ஒருவரான சாணக்கியன் அவதூறுகளை பரப்பி வரும் அதேவேளை, மட்டக்களப்பில் தனது அரசியல் எதிரிகளை விமர்சிப்பதற்காகவும் தமிழ்ப் பொது வேட்பாளரை தோற்கடிக்க வேண்டும் என்னும் நோக்கத்துடனும் செயல்பட்டு வருகின்றார்.

மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் என்று சொல்வது போன்றுதான் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் இன்றைய நிலைமை. கட்சியின் தலைமை மிகவும் பலவீனமாக இருப்பதால் தமிழ் அரசுக் கட்சிக்குள் அதிகமான தலைவர்கள் இருகின்றனர். இதன் விளைவாகத்தான் பல கருத்துகள் வெளிவருகின்றன. ஒரு கட்சிக்குள் இருந்து பல கருத்துகள் வெளிவருவது உண்மையில் ஜனநாயகம் அல்ல - மாறாக அராஜகமாகும். அதாவது, கட்சியானது அதிகமான குழப்பவாதிகளால் விழுங்கப்பட்டிருக்கின்றது என்பதுதான் அதன் பொருள். ஒரு காலத்தில் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்றார். ஆனால், இப்போதோ - அவர் உருவாக்கிய கட்சியை கடவுளாலும் காப்பாற்ற முடியாது என்னும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

## நல்லூரான் திருவடி - 14

# “நீ எடுத்த காவடியை பக்குவமாய் ஆடி இறக்கி வை”

**திருமதி மகாதேவி மகாலிங்கம்**



ஒருமுறை எனது சிறிய தாயார் சுவாமியை அணுகி, தான் துறவறம் பூணப் பெரிதும் விரும்புகிறாரெனக் கூறினார். அதற்கு பதிலளிக்கையில், “நீ எடுத்த காவடியை பக்குவமாய் ஆடிமுடித்து இறக்கி வை”, என்றார். இன்னொரு சந்தர்ப்பத்தில் “இனி உனக்குப் பிறவியில்லை. அப்படிப் பிறவி எடுத்தாலும் எனக்கு தொண்டு செய்யவே வருவாய்”, என்றாராம் யோகர்.

எமக்கும் சுவாமிகளுடன் தொடர்பு ஏற்பட்டதால் அவருடனான சில அனுபவங்கள் உண்டு. எனது கணவர் எமது விவாகத்துக்கு முன்பதாக சுவாமியோடு எத்தகைய தொடர்புமில்லாதவராக இருந்தார். சுவாமி பணக்காரர்களையே ஆதரிப்பவர் எனவும், தமக்குப் பிடிக்காதவர்களை கடும் வார்த்தைகளால் ஏசுவார் என்றும் கூறுவார். ஒருநாள் நானும் எனது கணவரும் சுவாமிகளைச் சந்திக்கச் சென்றோம். சுவாமிகள் எம்மை மிக அன்பாக வரவேற்று தம்மருகே தரையில் அமரும்படி கூறினார். பின்னர் அங்கிருந்த அடியவர் ஒருவரிடம் சிவபுராணத்தை படிக்கும்படி கூறினார். அதன் பின்னர் எனது கணவரிடம் அவரின் வேலை பற்றியும் பெறுகின்ற சம்பளம் பற்றியும் விசாரித்தார்.

யோகர் அன்று எம்முடன் நடந்துகொண்ட முறையும் கலந்துரையாடலில் அவர் தெரிவித்த வசனங்களும் எம்மைப் பெரிதும் கவர்ந்தன. சுவாமிகளது எளிமையான தோற்றம், அவரது பாவனை, அவர் உணவு உட்கொள்ளும் முறை என்பவற்றை நேரில் கண்டபோது அவர் ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடுகளைக் கடந்த மாமுனிவர் என்பதை எனது கணவர் நேரில் கண்டுகொண்டார். அன்று முதல் யாழ்ப்பாணம் செல்லும்போதெல்லாம் சுவாமிகளைச் சென்று சந்திப்பதை வழக்கமாக்கிக்கொண்டோம். ஒரு சந்தர்ப்பத்தில், “இயேசு கிறிஸ்துவுக்கும் கோபம் வருவதுண்டு” என்றார். சுவாமி ஏன் இவ்வாறு கூறினார் என்று சிந்தித்தேன். எனது கணவருக்கு அதிகமாகக் கோபம் வரும். இதனை சுவாமி அறிந்து அவரைத் திருத்தமாட்டாரா என்று எண்ணியவாறே அன்று சுவாமியைச் சந்தித்தேன். எனது எண்ணத்தை அறிந்தே சுவாமி அவ்வாறு கூறினார் என்பதை பின்னர் அறிந்து கொண்டேன்.

1960ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தல் வேலை சம்பந்தமாக நாம் யாழ்ப்பாணம் சென்றோம். தேர்தல் வேலை முடிவுற்றதும் சுவாமியைச் சந்திக்கச்சென்றோம். அன்று எம்மோடு நன்றாகவே

சுவாமி உரையாடினார். நாம் விடைபெற்று வாகனத்துக்குத் திரும்பும்வேளை சுவாமியும் எம்மோடு வாகனம்வரை வந்து வாகனக் கதவையும் திறந்து எம்மையும் ஏறவிட்டு வாகனம் கிளம்பும்போது

“கல்லு கில்லு அடித்து சேதங்கள் ஏற்படலாம். கவனமாக வாகனத்தைச் செலுத்தவும்” என்றார்.


அவர் கூறியபடி நாம் மிக கவனமாக வாகனத்தைச் செலுத்தினோம். இருந்தபோதிலும் வழமையான பாதையிலிருந்தும் விலகி நாம் திசைமாறிச்சென்றோம். அப்போது நாம் வழிதவறியதை உணர்ந்தபோது ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த இடையன் ஒருவன் தென்பட்டான். அந்த இடையன் காட்டிய வழியில் மிகக் கவனமாக வாகனத்தைச் செலுத்தினோம். அப்படி இருந்தபோதிலும் ஒரு கல் பெற்றோல் தாங்கியை அடியில் தாக்கி அதில் துளையிட்டது. இதனால் பெற்றோல் கசிந்து வெளியேறி வாகனம் ஓடமுடியாத நிலை ஏற்பட்டது. அச்சமயம் கடவுள் கிருபையால் ஒருவர் வந்து எமக்கு உதவியதனால் நாம் தொடர்ந்து பயணத்தை தொடர முடிந்தது.

ஒரு தடவை யாழ்ப்பாணத்தில் மழையின்றி வறரட்சி காணப்பட்டதாம். இதைக்கண்ட சுன்னாகம் பகுதி மக்கள் சுன்னாகம் சந்தைக்கு அருகே கூடி கொடும்பாவி கட்டி இழுத்து வழிபாடு செய்தனர். அப்போது யோகர் அவ்வழியே வந்தபோது அப்பகுதி மக்கள் தமது கவலையை வெளிப்படுத்தினர். அம்மக்களது கவலையை அறிந்த யோக சுவாமிகள் தமது சடையை விரித்து சிவனைப்போல ஒற்றைக்காலில் நின்றவாறு தாண்டவமாடினாராம். அச்சமயம் மழை பெரிதாக நெடுநேரம் பெய்ததை சுன்னாகம் மக்கள் கண்டு களிப்புற்றனர்.

**தொகுப்பு: அனந்த பாலகிட்ணர்**

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். மதிப்புக் கூடும் நாள்.

**இடபம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
கடந்த 2 நாட்களாக் இருந்த அலைச்சல் நீங்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். மாற்றம் ஏற்படும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப்பாருங்கள். வேலையில் பார்த்துக் கொள்ளுங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
உங்களின் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். சகோதரர் வகையில் உதவிகள் கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். வேலையாட்கள் மதிப்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கன்னி**
எதிர்பாராத பணவரவு உண்டு. அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உத்தியோகத் தில் புதுமையை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். யோகம் கிட்டும் நாள்.

**துலாம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் கல்வி பற்றி யோசிப்பீர்கள். அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு சிந்தனை திறன் வெளிப்படும் நாள்.

**விருட்சிகம்**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங் முன்னின்று நடத்துவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. நினைத்ததை முடிக்கும் நாள்.

**மகரம்**
கடந்த 2 நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். நன்மை நடக்கும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். அதிக வேலைச் சுமையால் அவ்வப் போது கோபப்படுவீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மீனம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

# உதயநிதி துணை முதல்வரானால் தி. மு. கவின் தீங்கு அதிகரிக்கும்!

## மத்திய இணையமைச்சர் முருகன் சாடல்

தூத்துக்குடி, ஒக. 22

உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராக வருவதால், தமிழ் நாட்டில் பெரிதாக எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. தமிழக அமைச்சர்களும் தி. மு. கவினரும் மக்களுக்கு செய்யும் தீங்குதான் இன்னும் அதிகமாகும்- இவ்வாறு மத்திய இணை அமைச்சர் எல். முருகன் சாடியுள்ளார்.

பிரதமர் மோடி நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்கிறார். கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் வளர்ச்சி வேகம் அதிகரித்துள்ளது என்றும் எல். முருகன் கூறினார். தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கருணாநிதி நினைவு நாணய வெளியீட்டு விழா தமிழக அரசு



விழாவாகும். இது அரசியலுக்கு அப்பாற்பட்டது என்றும் அவர் கூறினார். (எ)

# பா. ஜ. கவின் கூட்டணிக்கு விஜய் வந்தால் ஏற்போம்

## சொல்கிறார் அண்ணாமலை

பல்லடம், ஒக. 22

பா. ஜ. கவின் மாமன் - மச்சான் கூட்டணிக்கு நடிகர் விஜய் வந்தால் ஏற்போம் என்று பா. ஜ. கவின் தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

பல்லடத்தில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கருணாநிதி நினைவு நாணய வெளியீட்டு விழா மாநில அரசு நடத்திய விழாவாகும். மத்திய அரசு சார்பில் அமைச்சர் ராஜ் நாத்சிங் பங்கேற்றார். கருணாநிதிக்கு கும்பிடு போடுவது தவறில்லை. ஒருவரது காலில் விழுவதுதான் தவறு. முன்னாள் வருவாய்த்துறை அமைச்சர் ஆ.பி. உதயகுமார் சசிகலா முன்பு எவ்வாறு நிற்பார் என்பது அனைவருக்கும் தெரியும். பன்முகத்திறன் கொண்ட கருணாநிதியை கும்பிட்டதில் எந்தத் தவறும் இல்லை. தி. மு. கவை எதிர்க்கும் ஒரே அரசியல் கட்சி பா. ஜ. கதான். அமைச்சர் ராஜ்நாத் சிங் வரும்போது அவருடன் கருணாநிதிக்கு செலுத்த வேண்டிய மரியாதையை செலுத்தவே நிகழ்ச்சியில் பங்கேற்றேன்- என்றார். (எ)

# “வாக்குக்காகவே முருகன் மாநாடு”

திருநெல்வேலி, ஒக. 22

பா. ஜ. கவுக்கு ஆதரவாக இந்துக்களின் வாக்கு வங்கி மாறிவிடுமோ என்ற அச்சத்தில் தி. மு. க. இப்போது முத்தமிழ் முருகன் மாநாட்டை நடத்துகிறது. தமிழகத்தில் மத்திய அரசின் முடிந்த திட்டங்களுக்கான அறிக்கைகள் அரசால் முறையாக சமர்ப்பிக்கப்படாததால் நிதி வழங்கப்படாமல் உள்ளது. அறிக்கைகள் வழங்கினால் உடனடியாக நிதி வழங்கப்படும் என்று மத்திய இணை அமைச்சர் எல். முருகன் தெரிவித்தார்.

திருநெல்வேலி, பாளையங் கோட்டையில் சுதந்திர போராட்ட வீரர் ஒண்டிவீரன் நினைவேந்தலில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளை வன்மையாக கண்டிக்கிறேன். இந்த விவகாரத்தில் மாநில அரசுகள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை பெற்றுத்தர வேண்டும். பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்குவங்க மாநிலத்தில் பெண் மருத்துவர் மீதான பாலியல் வன்கொடுமை தாக்குதல் விவகாரத்தில் மாநில அரசால் நடவடிக்கை எடுக்க முடியாததாலேயே இப்போது சி. பி. ஐ. விசாரித்து வருகிறது என்றும் அவர் கூறினார். (எ)

# பின்வாங்கியது பா. ஜ. க. அரசு சமூக நீதிக்கு கிடைத்த வெற்றி

## முதல்வர் ஸ்டாலின் மகிழ்ச்சி

சென்னை, ஒக. 22

இந்தியா கூட்டணியின் கடும் எதிர்ப்பு காரணமாகவே லேட்டரல் என்ட்ரி நியமனங்களை மத்திய பா. ஜ. க. அரசு திரும்பப் பெற்றுள்ளது. இது சமூக நீதிக்கு கிடைத்த வெற்றி. பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க நாடு முழுவதும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஸ்டாலின் தனது எக்ஸ் சமூக வலைத்தளப் பக்கத்தில், மத்திய பா. ஜ. க. அரசு பல்வேறு வகையில், இடஒதுக்கீடு முறையை பலவீனப்படுத்த முயற்சித்து வருவதால், நாம் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இடஒதுக்கீட்டில் தன்னிச்சையான 50 சதவீதம் என்ற உச்ச வரம்பு உடைக்கப்பட வேண்டும். சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.(எ)

# ஆம்ஸ்ட்ராங் கொலை விவகாரம்: இயக்குநர் நெல்சன் மனைவியிடம் பொலிஸார் திடீரென விசாரணை!

சென்னை, ஒக. 22

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு விவகாரத்தில் பிரபல திரைப்பட இயக்குநர் நெல்சனின் மனைவி மோனிஷாவிடம் பொலிஸார் விசாரணை நடத்திய விவகாரம் சினிமா வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கொலை வழக்கில் தேடப்பட்டு வரும் ரவுடி



சம்போ செந்திலின் கூட்டாளிக்கு மோனிஷா அடைக்கலம் கொடுத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. (எ)

# செந்தில் பாலாஜி வழக்கு ஒத்திவைப்பு

புதுடில்லி, ஒக. 22

உச்ச நீதிமன்றத்தில் திகதி குறிப்பிடாமல் செந்தில் பாலாஜி பிணை கோரிய வழக்கில் தீர்ப்பு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

தமிழக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி சட்டவிரோத பணப் பரிமாற்ற வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இரு தரப்பு வழக்கறிஞர்களின் வாதத்தைத் தொடர்ந்து, நீதிபதிகள், இந்த வழக்கின் தீர்ப்பை மீண்டும் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்றதிகாரத்தை நீக்க விரும்பும் வேட்பாளர்கள் அதனை எப்படி செய்வர்?

## திட்டத்தை முன்வைக்கக் கோருகிறார் அலி சப்ரி



கொழும்பு, ஓக. 22

**நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்க விரும்பும் ஜனாதிபதி வேட்பாளர்கள் அதனை எவ்வாறு முன்னெடுக்கப்போகின்றனர் என்ற திட்டத்தை முன்வைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தெளிவான திட்டம் இல்லாத தெளிவற்ற வாக்குறுதிகளால் வாக்காளர்களை குழப்பவேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவது தொடர்பில் புதிய வேண்டுகோள்களும் வாக்குறுதிகளும் வெளியாகியுள்ளன. இது கடந்த காலங்களில் வழங்கப்பட்ட ஆனால் ஒருபோதும் நிறைவேற்றப்படாத வாக்குறுதி.

சந்திரிகா குமாரதுங்க போன்ற தலைவர்கள் தங்களின் பதவிக்காலம் முடிவடையும் வரை இதனை பிற்போட்டனர்.

அதேவேளை மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்தின் உத்தரவு காரணமாகவே தான் நிறைவேற்றதிகாரம் குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்திருந்தார்.

உண்மையான நிலவரம் என்னவென்றால் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்குவது எங்களின் அரசமைப்பின் சில பிரிவுகளின் மீது நேரடியாக தாக்கத்தை செலுத்துகின்றது.

சர்வஜன வாக்கெடுப்பு இல்லாமல் இந்த மாற்றத்தை மேற்கொள்ளமுடியாது என உயர்நீதிமன்றம் தெளிவாக தெரிவித்துள்ளது.

இது வெறுமனே அரசியல் உறுதிப்பாட்டுடன் தொடர்புபட்ட விடயம் மாத்திரமில்லை, இது அரசியலமைப்பு தேவை.

ஆகவே நீங்கள் இந்த வாக்குறுதி குறித்து உண்மையான அர்ப்பணிப்பை கொண்டிருக்கின்றீர்கள் என்றால், நாங்கள் பிரத்தியேகங்களை பற்றி பேசுவோம். இது குறித்த சர்வஜன வாக்கெடுப்பு எப்போது இடம்பெறும்? உங்களின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னரே இந்த விடயத்துக்கு தீர்வை காண்பதற்கு நீங்கள் திட்டமிட்டுள்ளீர்களா?

இலங்கை மக்களுக்கு காலக்கெடு மற்றும் செயல்முறை பற்றிய தெளிவான விடயங்கள் அவசியம்.

நமது ஜனநாயகம் வெளிப்படைத் தன்மை,மற்றும் நேர்மையால் செழிப்படைகின்றது.

நிறைவேற்றதிகார முறை நீக்கம் என்ற மாற்றத்தை நீங்கள் உண்மையிலேயே செய்ய விரும்பினால் அதனை எவ்வாறு முன்னெடுக்க விரும்புகின்றீர்கள் என்ற வழிகாட்டுதல்களை வழங்கவேண்டியது உங்கள் கடமை - என்றார். (அ)

# பணத் தகராறு காரணமாக மாமியை கொன்ற மருமகன்!

கொழும்பு, ஓக. 22

மாமியாரை கொன்று மனைவி மற்றும் மகளை கடுமையாக காயப்படுத்திய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கலபிடமட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லெவங்கம பகுதியிலுள்ள வீடொன்றுக்கு நபர் ஒருவர் வந்து, பெண் ஒருவரைக் கொன்றதாகவும் மேலும் இரு பெண்களை காயப்படுத்தியதாகவும் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதலவத்த, லெவங்கம பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபர் பணத் தகராறு தொடர்பாக மனைவி மற்றும் மனைவியின் தாயாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

பின் மனைவியின் தாயாரை கல்லால் தாக்கியதில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டதுடன், படுகாயமடைந்த அவர் கரவனெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

மேலும் மனைவியையும் மகளையும் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் 44 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கலபிடமட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# சீரற்ற காலநிலை; 3,432 பேர் பாதிப்பு

கொழும்பு, ஓக. 22

சீரற்ற காலநிலை காரணமாக 1,119 குடும்பங்களைச் சேர்ந்த 3,432 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி களுத்துறை, புத்தளம், கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மழையுடன் வீசிய கடுங் காற்று காரணமாகக் குறித்த பகுதிகளில் உள்ள 76 வீடுகளுக்குப் பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# இலங்கை மின்சார சபைக்கு 34.53 பில்லியன் ரூபா இலாபம்

கொழும்பு, ஓக. 22

இலங்கை மின்சார சபை இந்த வருடத்தின் கடந்த காலாண்டில் 34.53 பில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றுக் கொண்டுள்ளதாக சபையின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரையிலான காலாண்டில் வரி செலுத்துதல் உள்ளிட்ட செலவினங்களுக்கு அப்பால் சுத்த இலாபமாக இந்த தொகை பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கு முன்னர் கடந்த மார்ச் மாதம் முடிவடைந்த காலாண்டில் இலங்கை மின்சார சபை 84. 67 பில்லியன் ரூபாவை இலாபமாக பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர் , அதற்கிணங்க இந்த வருடத்தின் முதல் அரையாண்டில் மேற்படி சபை 119.20 பில்லியன் ரூபா இலாபமாக பெற்றுக் கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த ஜூன் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில் மின்சார சபை பெற்றுக் கொண்ட 34. 53 பில்லியன் ரூபா இலாபம் 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தோடு முடிவடைந்துள்ள காலாண்டுடன் ஒப்பிடுகையில் 67. 2 வீத அதிகரிப்பாகும் என்றும் அவர் கூறினார். (அ)

# சுற்றுலா வீசா வழங்கல் தொடர்பில் சட்ட மாஅதிபரால் நகர்த்தல் பத்திரம்

கொழும்பு, ஓக. 22

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு விசா வழங்குவது தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பில் சட்ட மாஅதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

குறித்த தீர்ப்பிற்கமைய மேற்கொள்ளப்படக்கூடிய அனைத்து நடவடிக்கைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், மேலும் தெளிவுபடுத்திக்கொள்ளப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் சட்ட மாஅதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாக செயலாளர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் சட்ட மாஅதிபருடன் எதிர்வரும் தினங்களில் விசேட கலந்துரையாடல் முன்னெடுக்கப்படவுள்ளதாக வியானி குணதிலக கூறினார்.

இது தொடர்பில் சட்ட மாஅதிபர் திணைக்களத்திடம் வினவிய போது, ஏற்பட்டுள்ள சில சிக்கல்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரத்தின் ஊடாக விடயங்களை முன்வைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இலத்திரனியல் விசா சேவையை வழங்குதல் தொடர்பான செயற்பாட்டை இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்க அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானம் செயற்படுத்தப்படுவதைத் தடுத்து உயர் நீதிமன்றம் அண்மையில் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

அதற்கமைய கடந்த 2ஆம் திகதி இரவு முதல் அமுலாகும் வகையில் ஒன்லைன் முறையில் விசா வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்படுவதாக குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தெரிவித்தது. (அ)

# டெங்கு அதிகரிக்கும் சாத்தியம்!

கொழும்பு, ஓக. 22

நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக டெங்கு நோய் அதிகரிக்கக்கூடிய நிலைமை உள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 34, 906 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதில் மேல் மாகாணத்திலேயே அதிகளவானோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, மேல் மாகாணத்தில் இதுவரையில் 14, 248 பேர் டெங்கு நோயுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், இந்த வருடத்தின் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

எனவே, நிலவும் மழையுடனான காலநிலையைக் கருத்திற் கொண்டு டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் மாத்திரம் இரத்தினபுரி மாவட்டத்தில் 2,198 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, டெங்கு நோய் தொடர்பில் பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் பிரசார செலவு வரம்பை மீறினால் உடன் சட்ட நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 22

தேர்தல் பிரசார செலவு வரம்பை மீறும் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அத்துடன் எந்தவொரு விதி மீறல்களையும் பொலிஸாருக்கு அறிவிப்பதற்கான உரிமை பொது மக்களுக்கு உள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக வாக்காளர் ஒருவருக்கு அதிகபட்சமாக 109 ரூபாவை மாத்திரம் செலவிடவேண்டும் என அறிவித்து அதிவிசேட வர்த்தமானி வெளியானது.



மொத்த செலவினத்தில் 60 சதவீதத்தை நேரடியாக ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் செலவிட முடியும் எனவும், எஞ்சியுள்ள 40 சதவீதத்தை வேட்பாளரின் அரசியல் கட்சி அல்லது குழுவுக்கு ஒதுக்கீடு செய்ய முடியுமெனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு 21 நாட்களுக்குள் அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் தேர்தல் செலவு தொடர்பான அறிக்கையை தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கவேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைக் கட்டியெழுப்ப புதியதொரு திட்டம் தயார்!

## அநுரகுமார திஸநாயக்க அறிவிப்பு

கொழும்பு, ஓக. 22

**தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையை மாற்றி நாட்டைக் கட்டியெழுப்ப புதிய திட்டம் அமுல்படுத்தப்படும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.**



கல்கமுவ நகரில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2048 ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தியடையும் என தற்போதைய ஜனாதிபதி கூறுகிறார்.

அதுவரை மக்கள் பட்டினியால் வாடியிருக்கவேண்டும் என்றா அவர் கருதுகிறார்.

மின்சார கட்டணம் 33 வீதத்தினால் குறைக்கப்படும். குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு மாதாந்தம் 10000 ரூபா வழங்கப்படும்.

எரிபொருள் விலைகள் குறைக்கப்படும் . உணவு மற்றும் கல்விக்கான பெறுமதி சேர் வரி நீக்கப்படும்.

பிணையின்றி கடன் வழங்குவதற்கான அபிவிருத்தி வங்கியொன்று அறிமுகம் செய்யப்படும். செலுத்தப்படாத வரி நிலுவைகள் மீள அறவீடு செய்யப்படும்.

எனவே தற்போதைய சூழ்நிலை மாற்றியமைக்கப்பட்டு, புதிய திட்டங்கள் அமுல்படுத்தப்படும் - என்றார். (அ)

# பியும் ஹஸ்திகவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, ஓக. 22

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய போதைப்பொருள் கடத்தல்காரரான குடு சலிந்துவின் சகாவான "பியுமா" எனப்படும் பியும் ஹஸ்திக எதிர்வரும் செப்ரெம்பர் 04 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நேற்று கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோதே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அத்துடன், சந்தேக நபரின் கணக்குகள் ஊடாக பெருமளவிலான பணம் புழக்கத்தில் உள்ளதால் விரிவான விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பயிர்ச் சேதங்களுக்காக 100,000 ரூபாய் இழப்பீடு!

கொழும்பு, ஓக. 22

பயிர்ச் சேதங்களுக்கான நட்டஈடாக ஏக்கரொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இதன்படி வறட்சி, வெள்ளம் மற்றும் வன விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு இவ்வாறு இழப்பீடு வழங்கப்படவுள்ளது. (அ)




# நுவன் போபகேயை ஆதரித்து யாழ்ப்பாணத்தில் பிரசாரம்!

யாழ்ப்பாணம், ஓக. 22

மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவன் போபகேவை ஆதரித்து நேற்று யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நேற்று காலை 09.30 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமான குறித்த பிரசார நடவடிக்கை யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்று குழு உறுப்பினர் வசந்த முதலிகே, புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் சிலர் கலந்துகொண்டு மக்களுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கினர். (அ)

# மன்னார் பட்டதாரி யுவதி மரணம்; வைத்தியரும் பணி இடை நீக்கம்!

மன்னார், ஓக. 22

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மரியராஜ் சிந்துஜா என்ற பெண் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வைத்தியர் ஒருவரை பணியிடை நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதம் ஒன்று மத்திய சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் குழந்தையைப் பிரசவித்த 27 வயதான மரியராஜ் சிந்துஜா என்ற பட்டதாரி பெண், அதிக குருதி போக்கு காரணமாகக் கடந்த மாதம் 28ஆம் திகதி மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

எவ்வாறாயினும் அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கிருந்த வைத்தியர்கள் அவருக்குரிய முறையில் சிகிச்சையளிக்கவில்லை எனவும் வைத்தியர்களின் அசமந்த போக்கின் காரணமாகவே அவர் உயிரிழந்ததாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு அமைய ஏலவே, நான்கு பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு தாதியர்களுக்கும் இரண்டு குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் இவ்வாறு பணியிடை நீக்கம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் வைத்தியர் ஒருவருக்கும் பணியிடை நீக்கம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

எனினும் இதுவரை குறித்த கடிதம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையைச் சென்றடையவில்லையென வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் மரியராஜ் சிந்துஜாவின் மரணம் தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சின் அதிகாரிகள் குழுவொன்று மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# சிவில் அமைப்புக்கள் உள்ளிட்ட மேலும் சில குழுக்கள் சஜித்துடன்!

கொழும்பு, ஓக. 22

சிவில் அமைப்புகள், அரசியல், கலைஞர்கள் மற்றும் தொழில்சார் செயற்பாட்டாளர்கள் உட்பட பல குழுக்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டன.

இதற்கான நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை காலை பத்தரமுல்லையில் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்றது.

இதன்போது புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை வெற்றிக்கு ஆதரவளிக்கும் நோக்கில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், இலங்கை கள அதிகாரிகளின் தொழிற்சங்கங்களின் ஒன்றியம், அகில இலங்கை தொழிற்சங்க கல்வி சாரா தொழிலாளர் சங்கம், தேசிய சிவில் அமைப்பு கூட்டு சங்கம், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் சங்கம் மற்றும் பல சிவில் அமைப்புக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டன. (அ)

# பக்கச்சார்புடன் நடக்கிறது பவ்ரல்

## புதிய ஜனநாயக முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 22

தெரிவு செய்யப்பட்ட 6 ஜனாதிபதி வேட்பாளர்களை மாத்திரம் அழைத்து எதிர்வரும் 7ஆம் திகதி பகிரங்க விவாதம் ஒன்றை நடத்த பவ்ரல் அமைப்பு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக குற்றம் சுமத்தி புதிய ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இலங்கையின் பிரதான தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பு பக்கச்சார்பாக செயற்படுவதாகவும், இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் 39 வேட்பாளர்கள் தோற்றியுள்ள நிலையில், பவ்ரல் அமைப்பு 6 பிரதான வேட்பாளர்களை மாத்திரமே விவாதத்துக்கு தெரிவு செய்துள்ளதாக தேசிய ஜனநாயக முன்னணியின் செயலாளர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த 19ஆம் திகதி பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அனுரகுமார திஸாநாயக்க, நாமல் ராஜபக்ஷ, திலித் ஜயவீர, அரியநேந்திரன் ஆகிய வேட்பாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி வேட்பாளர்களில் இடம்பெற்றிருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, விஜயதாச ராஜபக்ஷ மற்றும் ரொஷான் ரணசிங்க ஆகியோர் விவாதத்துக்கு அழைக்கப்படவில்லை என முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (அ)

# கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலைய ஒப்பந்தம் கைச்சாத்து!

கொழும்பு, ஓக. 22

இலங்கையின் எல்.டி.எல் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கும் இந்தியாவின் பெற்றோநெட் எல்.என்.ஜி நிறுவனத்துக்கும் இடையில் நேற்று முன் தினம் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கெரவலப்பிட்டிய "சொபாதனவி" மின் உற்பத்தி நிலையத்திற்கான இயற்கை திரவ எரிவாயுவைச் சேமிப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், எரிவாயு மீள் உருவாக்கம் மற்றும் விநியோகித்தல் தொடர்பில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர மற்றும் இலங்கைக்கான இந்திய பிரதிதூதுவர் ஆகியோரின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் முறைப்பாட்டு இலங்கங்கள் பார்வைக்கு!

## ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பணிப்புரை



யாழ்ப்பாணம், ஒக. 22

**வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் முறைப்பாடுகளுக்கான தொடர்பிலக்கங்கள் அடங்கிய அறிவிப்பு பதாதை காட்சிப்படுத்தப்படவேண்டும் என வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.**

அத்துடன் வடக்கில் உள்ள அனைத்து வைத்தியசாலைகள், அரச மருந்தகங்கள் ஆகியவற்றில் முன்னெடுக்கப்படும் சேவைகள் தொடர்பான தகவல் அடங்கிய பாதாதைகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

நோயாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள், நோயாளர்களும், வைத்தியர்களும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், சேவையை பெற்றுக் கொள்வதில் தாமதம் அல்லது சிக்கல்கள் ஏற்பட்டால் தொடர்பு கொள்ளவேண்டிய உயர் அதிகாரிகளின் தொடர்பு இலக்கங்கள் ஆகியன குறித்த பதாதையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் தொலைபேசி இலக்கங்கள் அறிவித்தல் பதாதையில் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும் எனவும், பொதுமக்களிடம் இருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் சுகாதாரத் துறை உயர் அதிகாரிகளுக்கு வடக்கு மாகாண ஆளுநர் கூறியுள்ளார்.

அத்துடன் ஆளுநரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கும் "அபயம்" பிரிவின் தொலைபேசி இலக்கமும் அறிவித்தல் பதாதையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நோயாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதோடு, அவர்களுக்கான சேவையை உறுதிப்படுத்த சுகாதார துறையினர் மேலும் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிகாட்டியுள்ளார். (அ-2)

# கிளிநொச்சியில் ரணிலுக்கு ஆதரவாக துண்டுப்பிரசுரம்

கிளிநொச்சி, ஒக. 22

கிளிநொச்சியின் சில பகுதிகளில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு கோரி துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் பிரதான அமைப்பாளருமான விஜயகலா மகேஸ்வரன், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து, கிளிநொச்சிக்கான தேர்தல் பிரசாரத்தை நேற்று ஆரம்பித்தார். முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாட்டை தொடர்ந்து, கிளிநொச்சியில் வர்த்தக நிலையங்கள் பொதுச்சந்தை உள்ளிட்ட பகுதிகளில் துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டன. (அ)

# விவாதத்தில் பங்கேற்க தயார்!

## அறிவித்தார் திலித் ஜயவீர

கொழும்பு, ஒக. 22

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஆறு வேட்பாளர்களுக்கு இடையிலான விவாதத்தில் பங்குகொள்வதற்கு தயார் என ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஆறு வேட்பாளர்களுக்கு இடையில் "மார்ச் 12 இயக்கம்" ஏற்பாடு செய்யவுள்ள விவாதத்தில் பங்கு கொள்வதற்கான அழைப்பை ஏற்றுக்கொள்வதாக "சர்வஜன பலய" வின் ஜனாதிபதி வேட்பாளர், திலித் ஜயவீர அறிவித்துள்ளார்.

இதன் மூலம், ஜனாதிபதி பதவிக்கு வாக்களித்தால், தாம் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் கொள்கைகள் குறித்த ஆக்கப்பூர்வமான உரையாடலைக் காண இலங்கையர்களுக்கு புதுமையான அனுபவம் கிடைக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ)

# கொழும்பு துறைமுகத்தில் அமெ. கடற்படைக் கப்பல்

கொழும்பு, ஒக. 22

அமெரிக்கக் கடற்படையின் கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்துள்ளது.

அமெரிக்கக் கடற்படையின் யு.எஸ்.எஸ்.ஒகேனே கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்த கப்பலானது விநியோகம் மற்றும் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கைக்கு வருகைதந்துள்ளது.

154 மீற்றர் நீளம் கொண்ட இந்த கப்பலில் சுமார் 328 பணியாளர்கள் கடமை புரிவதுடன், கொமான்டர் ரிச்சார்ட் ரே இந்தக் கப்பலின் கட்டளை அதிகாரியாவார். விநியோக தேவைகள் முடிந்ததும் இன்று கப்பல் புறப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வீதி விபத்துக்களினால் இவ்வருடம் 1,417 பேர் பலி!

கொழும்பு, ஒக. 22

நாடளாவிய ரீதியில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துக்களால் ஆயிரத்து 417 பேர் உயிரிழந்துள்ளதாக, போக்குவரத்து பிரிவிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் சுமார் 1000 பேர் மோட்டார் சைக்கிள் விபத்துக்களால் உயிரிழப்பதாகவும், இடம்பெறும் விபத்துகளில் மூன்றில் ஒன்று மோட்டார் சைக்கிள் விபத்து எனவும் அவர் குறிப்பிட்டார்.

2024 ஜனவரி 1 முதல் ஒகஸ்ட் 10 வரை, 1,352 ஆபத்தான வீதி விபத்துகளில், 1,417 பேர் உயிரிழந்துள்ளனர் என குறிப்பிட்ட அவர்,

கடந்த வருடம் 328 பாடசாலை மாணவர்கள் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளதாகவும் கூறினார். (அ)

# மாணவிகள் முதலில் காதலர்களாலேயே துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றனர்

## விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ

கொழும்பு, ஒக. 22

பெரும்பாலான பாடசாலை மாணவிகள் முதலில் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாவது தங்களது காதலர்களால் என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவ ஒன்றியத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாடசாலை மாணவிகளைப் போன்று மாணவர்களும் இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகுகின்றனர்.

பாடசாலை மாணவிகளை விட மாணவர்களே அதிகளவாக பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்- என்றார். (அ)

# நான் எந்தவொரு நபருக்கும் மதுவரி அனுமதிப் பத்திரம் வழங்கவில்லை!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஒக. 22

தாம் எந்தவொரு நபருக்கும் மதுவரி அனுமதிப் பத்திரம் வழங்கவில்லை அல்லது யாருடைய பெயரையும் வழங்க சிபாரிசு செய்யவில்லை என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியல் ஆதாயங்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில் எதிர்க்கட்சிகள் தவறான கருத்துக்களை சமூகமயப்படுத்துவதாக அமைச்சர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

அங்கு சிறப்புரிமைப் பிரச்னையொன்றை முன்வைத்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உரையாற்றுகையில்-

சபாநாயகரே, ஊடகங்களில் வெளியான தவறான தகவலைத் திருத்துவதற்கு எனக்கு சந்தர்ப்பம் வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தவறான தகவலை ஊடகங்கள் மட்டும் அல்ல, காலை நாளிதழ்கள் குறித்து தகவல் கொடுத்த ஊடக நிறுவனங்களும் இந்த தவறான தகவலை அடிப்படையாக வைத்து பேசியிருந்தன. நிகழ்ச்சியை வழங்கும் அறிவிப்பாளர்கள் தகவல் தவறாக இருந்தால் திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டனர். அண்மையில் இடம்பெற்ற அரசியல் கூட்டமொன்றில் தயாசிறி ஜயசேகர எம்.பி மது வரி அனுமதிப்பத்திரம் பெற்ற பலரது பெயர்களை குறிப்பிட்டுள்ளார். ஒருவருக்கு நான் கலால் அனுமதிப் பத்திரம் கொடுத்ததாகவும் கூறினார்.நான் யாருக்கும் மதுவரி உரிமம் வழங்கவுமில்லை. அதற்காக யாருடைய பெயரையும் பரிந்துரைக்கவுமில்லை.

அரசியல் வாதிகளுக்கு மது வரி உரிமம் வழங்கப்பட்டதாகக் கூறி அரசியல் ஆதாயம் அடைய எதிர்க்கட்சிகள் தவறான சித்தாந்தத்தை வளர்த்து வருகின்றனர்.

ஆனால் எந்தவொரு அரசியல்வாதிக்கும் மதுவரி உரிமம் வழங்கப்படவில்லை என மதுவரி ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.மேலும், அரசியல்வாதிகளின் பரிந்துரையின் பேரில் உரிமம் வழங்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவரது அறிக்கை தொடர்பாக ஊடகங்களுக்குச் சென்ற அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

அரசியல்வாதிகளுக்கு மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இன்று காலை தெரிவித்தார். இந்த அரசியல் ஆதாயங்களைப் பெறுவதற்காக தவறான தகவல்களை வெளியிட்டு அந்த எம்.பி.க்களுக்கு பாதகத்தை ஏற்படுத்துவதால் இந்தக் காரணத்தை முன்வைக்கிறேன்- என்றார். (அ)

# ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்ததால் ரிஷாத் பதியுதீனுக்கான நிதி அரசால் நிறுத்தம்

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, ஒக. 22

தேர்தல் காலங்களில் அரச நிதியை தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவது சட்டவிரோதமான குற்றமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ரிஷாத் பதியுதீன் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்து கொண்டமையால் அவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியை இரத்து செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தப் பணத்தை ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி வருகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருக்குமாறு அரச அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கிறேன். சட்ட விரோத செயற்பாடுகளை நிறுத்துவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு தலையீடு செய்ய வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது கோரிக்கை விடுத்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாவற்குடாவில் நள்ளிரவில் குடும்பஸ்தர் படுகொலை!

## பொலிஸார் தீவிர விசாரணை

காத்தான்குடி, ஓக. 22

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடாவில் நள்ளிரவில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

44 வயதுடைய குடும்பஸ்தரே வெட்டுக்காயங்களுக்குள்ளான நிலையில் மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் நள்ளிரவில் நாவற்குடா பகுதியில் வீதியில் இவர் வந்து கொண்டிருந்த போது இனந்தெரியாத வர்களால் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(எ)

# ஒற்றையாட்சி ஒழிக்கப்பட்டு சமஷ்டி கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

## கஜேந்திரன் எம். பி. தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஓக. 22

**இலங்கையில் தமிழ், முஸ்லிம் மக்களின் எதிர்காலம் பாதுகாப்பானதாக மாற்றியமைக்கப்படவேண்டும். அதற்கு ஒற்றையாட்சி கட்டமைப்பு ஒழிக்கப்பட்டு ஒரு சமஷ்டி கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**

ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்கக் கோரி கிழக்கு மாகாணத்தில் துண்டுப்பிரசுர விநியோகம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இது தொடர்பான நிகழ்வு மட்டக்களப்பு காந்தி பூங்காவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கஜேந்திரன் எம். பி. மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாமல் ராஜபக்ஷ, தமிழர்களுக்கு உரிமை கொடுக்க மாட்டேன், அதிகாரங்களை கொடுக்க மாட்டேன், வடக்கு - கிழக்கை இணைக்க மாட்டேன் என்று சொல்லும் துணிச்சல் வந்திருக்கின்றது.

இனப் படுகொலையாளிகளை பாதுகாத்து விட்டதன் விளைவாகத்தான் அவர்கள் துணிச்சலாக எழுந்து நின்று இன்று நாமல் ராஜபக்ஷவை ஒரு வேட்பாளராக நிறுத்தியிருக்கிறார்கள்.

நாமல் ராஜபக்ஷ வேட்புமனு தாக்கல் செய்யும் போது கோட்டாபய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ இவர்கள் அனைவரும் அவரோடு நிற்கின்றார்கள் என்று சொன்னால் இவர்களை இவ்வளவு சுதந்திரமாக செயல்படுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர்கள் யார்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

(எ)

# நற்பிட்டிமுனை குளப்பகுதியில் வீசப்படும் விலங்கு கழிவுகள்!

## தமிழர் பிரதேசம் என்பதால் புறக்கணிப்படுகிறதா?

கல்முனை, ஓக. 22

அம்பாறை, கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நற்பிட்டி முனை குளப்பகுதியில் தினமும் ஆடு, மாடு மற்றும் கோழிக் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன. இதனால் அந்தப் பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தமிழர் பிரதேசம் என்பதால் இந்த பாராமுகமா? அல்லது புறக்கணிப்பா? என்றும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

குறிப்பாக தாளவெட்டுவான் சந்தியிலிருந்து நற்பிட்டிமுனை நோக்கிச் செல்லும் பழைய இலங்கை மின்சார சபை வீதியின் இடப்பக்கமுள்ள குளக்கரையில் தினமும் இவ்வாறு விலங்குகளின் உடல் கழிவுகள் இனந்தெரியாதோரால் கொட்டப்பட்டு வருவது அதிகரித்துள்ளது.

இதனால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் வாழ முடியாத வாறு பெரிதும் அசௌகரியத் துக்குள்ளாகி உள்ளனர். இத னால் அந்த சூழலும் பாதிக்கப் பட்டு மாசடைந்து வருகின்றது. அதேநேரம் பொது மக்களுக்கு தொற்று நோய்களையும் உருவாக்கி விடுகின்ற நிலை மையும் காணப்படுகின்றன.

இதனை அந்தப் பகுதி குடியிருப்பாளர்கள் பல தடவைகள் கல்முனை மாநகர சபையிடமும், பொதுச் சுகாதார பரிசோதகரிடமும் முறையிட்டும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.



காகங்கள் கழிவுகளை அக்கம் பக்கத்திலுள்ள குடியிருப்புகளில் உள்ள கிணறுகளில் போடுகின்றன. நாய்களும் அசுத்தப்படுத்துகின்றன. இவ்வாறு கழிவுகள் வீசப்படுவதை தடுப்பதற்கு கல்முனை மாநகர சபை நடவடிக்கை எடுக்குமா? அல்லது இப்படியே பார்த்துக் கொண்டு இருப்பார்களா? என்று பிரதேச மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (எ)

# இளைஞர்களின் எழுச்சி மாநாடு

சாய்ந்தமருது, ஓக. 22

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட இளைஞர்களின் எழுச்சி மாநாடு சாய்ந்தமருது பௌஸி விளையாட்டு மைதானத்தில் நாளை மறுதினம் 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளரும், மயோன் கல்வி அபிவிருத்தி அமைப்பின் தவிசாளருமான றிஸ்லி முஸ்தபா தலைமையில் நடைபெறவுள்ள இந்த இளைஞர் மாநாட்டில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (எ)

# தொழு நோயாளர்கள் அதிகரிப்பதால் சம்மாந்துறையில் அதிகாரிகள் ஆய்வு

சம்மாந்துறை, ஓக.22

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அண்மைக் காலமாக தொழு நோயாளர்கள் இனங்காணப் பட்டு வருகின்றனர். இந்த நிலையில் குறித்த பிரதேசங்களில் சுகாதாரத்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட செந்நெல் கிராமப் பகுதியில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வீடு வீடாகச் சென்று தொழுநோய் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதனடிப்படையில் செந்நெல் கிராமத்தில் 42 குடும்பங்களைச் சேர்ந்த 145 பேருக்கு விழிப்புணர்வு செய்யப்பட்டதுடன், ஆரம்ப பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

உடலில் உள்ள உணர்வற்ற தழும்புகள் போன்றவை காணப்படுமிடத்து, தங்கள் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர், சுகாதார வைத்திய அதிகாரியை நாடி ஆலோசனையை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்களால் வழங்கப்பட்டன.

# துப்பாக்கிச்சூடு தொடர்பில் திருமலையில் 6 பேர் கைது!

திருகோணமலை, ஓக. 22

திருகோணமலை, சிறீபுரவில் 26 வயது இளைஞன் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி அவரைப் படுகொலை செய்த சம்பவம் தொடர்பில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கமுனுபுர, பிள்ளையார் சந்தி பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் இந்தக் கொலை இடம்பெற்றதாக சிறீபுர பொலிஸார் தெரிவித்தனர்.

டுபாயில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த "பாதாள பிரியந்த" எனப்படும் குணசிறி பிரியந்த என்ற நபரால் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடத்தப்பட்டதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், உயிரிழந்தவர் கொலை செய்ய திட்டமிட்ட நபர் அல்ல என சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தெரியவந்ததாக பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்டவர்கள் 20, 22, 38, 40 மற்றும் 47 வயதுடைய வெலிஓயா, பதவிய, கெப்பிட்டிகொல்லாவ மற்றும் பராக்கிரமபுர ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

# சஜித் அமைச்சராக இருந்தபோதே 2019இல் ஈஸ்டர் தாக்குதல் நடந்தது?

## அப்போது அவர் ஏன் நீதியை நிலைநாட்டவில்லை?

கல்முனை, ஓக. 22

இன்று எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் சஜித் பிரேமதாஸ, ஈஸ்டர் தாக்குதல் நடந்த காலத்தில் ஆளும் தரப்பில் ஓர் அமைச்சர். இன்று ஜனாதிபதி வேட்பாளராக இருந்து கொண்டு நீதியை நிலைநாட்டப் போவதாக கூறும் அவர் உட்பட பொறுப்புக்கூற வேண்டிய நிறைவேற்று அதிகாரத்தை கொண்டிருந்தவர்கள் என்று சிறீ லங்கா ஜனநாயக கட்சியின் தலைவர் அன்வர் எம். முஸ்தபா தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று நடந்த குண்டுத் தாக்குதலில் கிறிஸ்தவ மக்கள் பாதிக்கப்பட்டு பல நூற்றுக்கணக்கானோர் பலியாகினர். அதற்கு இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் தலைமைகளும், அன்றைய ஆளும்தரப்பாக இருந்து இப்போது எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்களும்கூட பொறுப்புக்கூற வேண்டும் - என்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து கல்முனையிலுள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென் கொரியாவை நெருங்கியது ஜோங்தாரி புயல்

சியோல், ஒக. 22

தெற்கு ஜப்பானின் ஒகினாவா தீவு அருகே பசுபிக் பெருங்கடலில் சக்திவாய்ந்த வெப்பமண்டல புயல் உருவானது. இந்த புயலுக்கு ஜோங்தாரி என பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் புயல் வேகமாக நகர்ந்து நேற்று காலை தென் கொரியாவை நெருங்கியது.

இதனால் தென் கொரியாவின் கடலோர பகுதிகளில் கடுமையான காற்று வீசுகிறது. கடல் சீற்றத்துடன் காணப்படுகிறது. புயல் நிலப்பகுதியை நெருங்கும்போது சூறைக்காற்றுடன் பலத்த மழை பெய்து, வெள்ளப்பெருக்கு ஏற்படலாம் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதையடுத்து, பிரபல சுற்றுலா பகுதியான ஜெஜூ தீவில் சில விமானங்களின் இரத்து செய்யப்பட்டுள்ளன. வெள்ள அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தீவில் வசிப்பவர்களை வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஈரானில் கோர விபத்து 28 யாத்திரிகர்கள் பலி



தெஹ்ரான், ஒக. 22

**ஈரானில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் சிக்கிய பாகிஸ்தானை சேர்ந்த 28 யாத்திரிகர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாகப் பலியாகினர்.**

ஈரானின் யாஸ்த் மாநிலத்தில் இந்த கோர விபத்து இடம் பெற்றது.

இதில், 28 பேர் பலியான நிலையில் 23 பேர் காயமடைந்தனர். அதில் 14 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்பதால் உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. 7ஆம் நூற்றாண்டில் மரணித்த ஷியா துறவியின் நினைவிடத்தில் வழிபடுவதற்காக சென்று கொண்டிருந்தவர்களே விபத்தில் சிக்கினர் என்று தெரிய வந்துள்ளது. (எ)

## ஆறு பணயக் கைதிகளின் உடல்கள் காஸாவில் மீட்பு

### இஸ்ரேல் இராணுவம் தகவல்

ஜெருசலேம், ஒக. 22

காஸாவில் மேலும் 6 பணயக் கைதிகளின் உடல்கள் மீட்கப்பட்டன என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

பலஸ்தீனத்தின் காஸா நகரை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 1, 200 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பெண்கள், சிறுவர்கள் உட்பட 250இற்கும் அதிகமானோரை பணயக் கைதிகளாக பிடித்து சென்றனர்.

இதையடுத்து ஹமாஸ் அமைப்பை அடியோடு அழித்து பணயக் கைதிகளை மீட்டுக் கொண்டு வருவோம் என சூளுரைத்து காஸா மீது இஸ்ரேல் போரை தொடங்கியது. சுமார் 10 மாதங்களாக நடந்து வரும் இந்த போரால், பலஸ்தீனத்தில் இதுவரை 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனரென காஸா சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் இராணுவத்தினர் தெற்கு காஸாவில் நடத்திய தேடுதல் வேட்டையின்போது, 6 பணய கைதிகளின் உடல்கள் மீட்கப்பட்டன என்று இஸ்ரேல் இராணுவம் தகவல் வெளியிட்டுள்ளது. ஆனால், அவர்கள் எவ்வாறு உயிரிழந்தனர் என்பது தொடர்பான விவரங்கள் வெளியிடப்படவில்லை.

ஹமாஸ் அமைப்பினரிடம் இன்னும் 110 இஸ்ரேலிய பணயக் கைதிகள் இருக்கின்றனர் என்று நம்பப்படுகிறது. இருப்பினும் இவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் கொல்லப்பட்டிருக்கலாம் என இஸ்ரேல் அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (எ)

## குரங்கம்மை பாதிப்பை கண்டறிய தயார் நிலையில் இருக்க வேண்டும்

### வைரஸ் ஆராய்ச்சி ஆய்வகங்களுக்கு இந்திய அரசு அவசர அறிவுறுத்தல்

புதுடில்லி, ஒக. 22

குரங்கு அம்மை தொற்று நோய் பாதிப்பை பொது சுகாதார அவசர நிலையாக ஐ. நா. அறிவித்துள்ளதையடுத்து வைரஸ் ஆராய்ச்சி மற்றும் கண்டறியும் ஆய்வகங்கள் தயார் நிலையில் இருக்குமாறு இந்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

ஆபிரிக்காவின் பல பகுதிகளில் குரங்கு அம்மை வேகமாக பரவி வருவதையடுத்து உலக சுகாதார அமைப்பு ஒகஸ்ட் 14இல் பொதுச் சுகாதார அவசர நிலையை அறிவித்தது. இது உலகின் பல்வேறு நாடுகளில் கவலையை அதிகரிக்கச் செய்துள்ளது. வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளை அவை முழுமையான மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி வருகின்றன.

இந்த நிலையில்தான் இந்திய மருத்துவ சபையுடன் இணைக்கப்பட்ட ஆய்வகங்களை தயார் நிலையில் இருக்குமாறு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.


குரங்கு அம்மை பாதிப்பை எதிர்கொள்வதற்கான தயார் நிலை உயர்நிலைக் குழுக் கூட்டம் பிரதமரின் முதன்மைச் செயலர் பி.கே. மிஸ்ரா தலைமையில் நடைபெற்றபோதே இந்த உத்தரவிடப்பட்டது. (எ)

## ரஷ்யாவின் இராணுவ முகாம்மீது உக்ரைன் ஏவுகணை தாக்குதல்

மொஸ்கோ, ஒக. 22

ரஷ்யாவிலுள்ள இராணுவ முகாம்மீது உக்ரைன் படையினர் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் இந்தியாவைச் சேர்ந்த 36 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

ரஷ்யா - உக்ரைன் இடையே கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரியில் தொடங்கிய போர் இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இந்த நிலையில் ரஷ்ய இராணுவ முகாம் ஒன்றில் பணியாற்றி வந்த இந்தியாவின் கேரளாவைச் சேர்ந்த சந்தீப் என்பவர்



ஏவுகணைத் தாக்குதலில் உயிரிழந்தார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர். (எ)

## கமலா ஹாரிஸ் தலைமையில் புதிய அத்தியாயம் காணும் அமெரிக்கா!

### முன்னாள் ஜனாதிபதி ஒபாமா நம்பிக்கை

சிகாகோ, ஒக. 22

ஜனநாயகக் கட்சியின் நம்பிக்கை கமலா ஹாரிஸ். அமெரிக்கா அவரின் தலைமையில் ஒரு புதிய அத்தியாயத்தைக் காணத் தயாராக இருக்கிறது என்று அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்தார்.

ஜனநாயக கட்சியின் தேசிய மாநாடு சிகாகோவில் நேற்று முன்தினம் தொடங்கியது. இன்று 22ஆம் திகதி வரை இந்த மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டின் ஆரம்ப நாளில் உரையாற்றிய ஒபாமா, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கடுமையான போட்டியிருக்கும். ஆகவே, வாக்காளர்கள் தாங்கள் எவர் மீது நம்பிக்கை கொண்டுள்ளனரோ அவர்களுக்காக உறுதியாகப் போராட வேண்டும். இதில் அமெரிக்க மக்கள் எந்தத் தவறும் செய்து விடக்கூடாது. இந்தத் தேர்தலை பெரிய போராட்டமாக பாவித்து மக்கள் பங்கேற்க வேண்டும். கமலா ஹாரிஸுக்கு அமெரிக்கா ஒரு வாய்ப்பைக் கொடுத்துள்ளது. அதனால், அவர் இன்று அமெரிக்கத் தேர்தலில் போட்டியிடுகிறார். அவர் தன் வாழ்நாள் முழுவதும் தனது அமெரிக்கா கொடுத்த வாய்ப்புகளை மீண்டும் நாட்டுக்கு வழங்க அர்ப்பணித்துள்ளார். அந்த அர்ப்பணிப்பை நாம் அங்கீகரிக்க நமக்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. உங்கள் அனைவரைப் பற்றியும் எனக்கு தெரியவில்லை.



ஆனால், நான் இன்று கமலாவுக்கு ஆதரவாக இயங்கத் தயாராகிவிட்டேன்- என்றார்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ஜோ பைடன், குடியரசு கட்சியின் வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் எப்போதும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு தலை வணங்குவார். நான் தலை வணங்கியது இல்லை. கமலா ஹாரிஸும் தலை வணங்க மாட்டார்- என்றார். ஜோ பைடனின் இந்த கருத்தால் அரங்கம் அதிர்ந்தது. (எ)

## மக்கள் சேவை செய்ய தயாராக இருக்கிறேன்

### ட்ரம்புக்கு எலான் மஸ்க் பதில்

வாஷிங்டன், ஒக. 22

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் எலான் மஸ்க்கை ஆலோசகராக நியமிப்பது குறித்து பரிசீலிக்க வாய்ப்புள்ளதாக டொனால்ட் ட்ரம்ப் கூறியதற்கு, பதிலளித்துள்ள எலான் மஸ்க், மக்கள் சேவை செய்யத் தயாராக இருக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதை முன்னிட்டு அங்கு தேர்தல் பிரசாரம் தீவிரமடைந்து வருகிறது. ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் கமலா ஹாரிஸ் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப்பட்டுள்ளார். அவரை எதிர்த்து, எதிர்க்கட்சியான குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் களமிறங்கியுள்ளார். இருவருக்கும் இடையே போட்டி கடுமையாகவுள்ளது. இருவரும் சம பலத்துடன் இருக்கின்றனர் என்று பல்வேறு கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தேர்தலில், ட்ரம்புக்கு உலகின் பெரும் பணக்காரரான டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி எலான் மஸ்க் ஆதரவு தெரிவித்தார். இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றி பெற்றால் அரசின் ஆலோசகராக எலான் மஸ்க்கை நியமிப்பது குறித்து பரிசீலிக்க வாய்ப்பு உள்ளதாக ட்ரம்ப் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலை ஒழித்து பொருளாதார சுதந்திரம் உருவாக்கும் பணியில் இணைந்துகொள்க!

## எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு



கொழும்பு, ஓக. 22

**புதிய சிந்தனை சமமான வழிமுறையை பின்பற்றி நீதியையும் நியாயத்தையும் நிலை நாட்டுகின்ற புதிய பாதைக்கு இட்டுச் செல்லும். இதில் ஊழல் மோசடிக்கு எந்த ஓர் இடமும் இல்லை. கொள்முதல் முறைகளையும் மோசடியான அரச கொடுக்கல் வாங்கல் முறைகளையும் தவிர்த்து, ஊழலை அடியோடு இல்லாது செய்யும் பொருளாதார சுதந்திரத்தை வெற்றிகொள்ளும் பணியில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறேன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**

எமது நாட்டின் எதிர்கால பொருளாதார வழிமுறைகள் பற்றிய சிநேகபூர்வ கலந்துரையாடல் மற்றும் கருத்தாடல்களில் ஈடுபட்ட எமது நாட்டின் வர்த்தகர்கள் மற்றும் வணிகத் துறையினருக்கு நன்றி தெரிவிக்கிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தேசிய தொழில் வல்லுநர்கள் பேரவை கொழும்பு, ஷங்கிரிலா ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்த இலங்கையின் அபிவிருத்தி வாய்ப்புகளைப் புரிந்து கொள்ளும் பொருட்டான இலங்கையின் பொருளாதார மற்றும் வணிகத் துறைகளைச் சேர்ந்த தொழில் வல்லுநர்கள், தொழில் முனைவோர் மற்றும் எதிர் காலவாதிகளின் கருத்தாய்வு மாநாட்டில் பிரதான கருத்துரையாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கலந்து கொண்டார். இம் மாநாட்டில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கருத்தாய்வு மாநாட்டில் இந்தியாவின் தாராளமயமாக்கல் கொள்கையின் பொருளாதார சிற்பி என கருதப்படும் கலாநிதி மான்டேக் சிங் நுகர்வோர் தயாரிப்புகள் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டி.கிருஷ்ணகுமார், வெரிட்டி ஆய்வகத்தின் பணிப்பாளர் கலாநிதி நிஷான் டி மெல், எரான் விக்கிரமரத்ன, சுஜீவ சேனசிங்க, ஹர்ஷன ராஜகருணா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு கருத்துரைகளையும் நோக்குகளையும் முன்வைத்தனர். (அ)

# ஐஸ் போதைப்பொருள் பாவித்த நிலையில் மாணவன் வவுனியா வைத்தியசாலையில்!

வவுனியா, ஓக. 22

வவுனியா நகரை அண்டிய பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 12 வயது மாணவன் ஒருவன் ஐஸ் போதைப்பொருள் பாவித்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவரது உடல் நிலை தேறி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நகரை அண்டிய பிரபல பாடசாலையில் தரம் 7 இல் கல்வி பயிலும் 12 வயது மாணவன் ஒருவன் பாடசாலைக்கு முன்பாகவுள்ள கடை ஒன்றின் அருகிலிருந்த ஒதுக்குப் புறமான இடம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு மீண்டும் பாடசாலைக்குள் சென்றுள்ளார்.

சிறிது நேரத்தில் குறித்த மாணவன் தொடர்ச்சியாக வாந்தி எடுத்தமையால் பெற்றோருக்கு தெரியப்படுத்தி அவர்கள் ஊடாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட மாணவன் தற்போது நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

குறித்த மாணவன் ஐஸ் போதைப் பொருளைப் பாவித்த தன் காரணமாக இவ் அசம்பாவிதம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இந்திய மீனவர் 22 பேருக்கும் தொடர்ந்தும் விளக்கமறியல்



கொழும்பு, ஓக. 22

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி கற்பிட்டி வடக்கு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்களையும் அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

இரண்டு படகுகளில் தமிழகம் - தூத்துக்குடியில் இருந்து வந்த மீனவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இந்திய மீனவர்கள் 22 பேரும் எல்லை தாண்டி புத்தளம் - கற்பிட்டி வடக்கு கடற் பகுதியில் மீன்பிடியில். ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கடந்த 5 ஆம் திகதி இரவு கடற்படையிரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், குறித்த இந்திய மீனவர்கள் பயணித்த இரண்டு விசைப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 22 மீனவர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக் கப்பட்ட பின்னர் அவர்கள் புத்தளம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சட்டவிரோதமாக இலங்கை எல்லைக்குள் நுழைந்தமை தொடர்பில் இந்த 22 இந்திய மீனவர்களுக்கும் எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

இதன்போது சந்தேக நபர்களான இந்திய மீனவர்கள் 22 பேரையும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

இந்நிலையில், சந்தேக நபர்கள் மீண்டும் நேற்று புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, சந்தேக நபர்களான 22 இந்திய மீனவர்களையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ)

# ஜனாதிபதி தேர்தல்; 666 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக. 22

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் நேற்று முன்தினம் வரையான காலப் பகுதிக்குள் 35 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அவை அனைத்தும் தேர்தல் விதிமுறைகளை மீறுவதாக அமைந்துள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த ஜூலை 31 ஆம் திகதி தொடக்கம் இதுவரை 666 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றில் தேர்தல் விதிகளை மீறியமைக்கான 642 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

# எஞ்சிய நஷ்டஈட்டு தொகையை செலுத்தி முடித்த மைத்திரிபால

கொழும்பு, ஓக. 22

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செலுத்த வேண்டியிருந்த 100 மில்லியன் ரூபா நட்டஈடுத் தொகையை அவர் செலுத்தி முடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 100 மில்லியன் ரூபாவும், முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் அரச புலனாய்வுப் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன ஆகியோருக்கு தலா 75 மில்லியன் ரூபாவும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு 50 மில்லியன் ரூபாவும், முன்னாள் தேசிய புலனாய்வுத் தலைவர் சிசிர மெண்டிஸ/க்கு 10 மில்லியன் ரூபாவும் கிடைத்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதற்கமைய அவர் செலுத்த வேண்டியிருந்த எஞ்சிய தொகையான 12 மில்லியன் ரூபாவை அவர் 16.08.2024 அன்று செலுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன ஆகியோர் இதுவரை நஷ்டஈடு செலுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# அவுஸ்திரேலியக் குடியுரிமையை தேவை ஏற்படின் இழக்கத் தயார்!

## திலகரத்ன டில்ஷான்



கொழும்பு, ஓக. 22

“தேவை ஏற்படின் தனது அவுஸ்திரேலிய குடியுரிமையை இழக்கவும் தயார் ”என இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் திலகரத்ன டில்ஷான் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி நேற்று முன் தினம் ஏற்பாடு செய்திருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சஜித் பிரேமதாஸவின் வேலைத்திட்டம் மற்றும் தொலைநோக்குப் பார்வையை மிகவும் உன்னிப்பாக ஆராய்ந்த பின்னரே அவருக்கு ஆதரவளிக்க நான் தீர்மானித்தேன்.

விளையாட்டு அமைச்சர் பதவியை எதிர்பார்த்து நான் எதிர்க்கட்சியில் இணையவில்லை. எனக்கு பாராளுமன்றம் செல்லவேண்டிய அவசியமில்லை.

எவ்வாறாயினும்,தேவை ஏற்பட்டால் தனது குடியுரிமையை விலக்கிக் கொள்ளத் தயார்.

‘பெரிய தியாகம் செய்துவிட்டேன். என் பிள்ளைகள் அனைவரும் அவுஸ்திரேலியாவில் இருக்கிறார்கள். கட்சி வேறுபாடின்றி நாட்டுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று என் குழந்தைகளை விட்டுவிட்டுத்தான் வந்தேன் - என்றார். (அ)

# தாயின் கையில் இருந்த துப்பாக்கி திடீரென வெடித்ததில் மகன் காயம்!

கொழும்பு, ஓக. 22

சூரியவெவ கபுகினிஸ்ஸ பிரதேசத்தில் தாயொருவரின் கையிலிருந்த வேட்டைத் துப்பாக்கி ஒன்று வெடித்தில் மூன்று வயதுடைய மகன் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த மகனின் தாயார் தென்னை மரத்துக்கு அருகில் இருந்த வேட்டைத் துப்பாக்கி ஒன்றைக் கையில் எடுத்து சரி பார்க்க முயன்றுள்ளார்.

இதன்போது, அந்த துப்பாக்கி திடீரென வெடித்ததில் அருகிலிருந்த மகனின் கன்னத்தில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மகன் அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவியை...

குறிப்பிட்டார்.

தலதா அத்துக்கோரள ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய புள்ளியாக இருந்த காமினி அத்துக்கோரளவின் சகோதரி ஆவார்.

அவர் 2004 இல் முதன்முதலில் பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப் பட்டார்.

மேலும், 2010, 2015 மற்றும் 2020 பொதுத் தேர்தல்களில், அவர் இரத்தின புரி மாவட்டத்தில் இருந்து வெற்றி பெற்று பாராளுமன்றத்துக்கு தேர்ந் தெடுக்கப்பட்டார்.

2020 இல், அவர் இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து 45,105 வாக்கு களைப் பெற்று ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் பாராளுமன்றத்திற்குத் தெரி வானார். (அ)


# பண்டாரிகொட எம்.பியானார்!

கொழும்பு, ஓக. 22

பந்துலால் பண்டாரிகொட சபாநாய கர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னி லையில் பாராளுமன்ற உறுப்பினராக நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

மனுஷ நாணயக்கார பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்ததன் காரண மாக பந்துலால் பண்டாரிகொட பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

அமைச்சர்களான மனுஷ நாணயக் கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்ய ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் சட்டப்பூர்வமானது என உயர் நீதிமன்றம் கடந்த 9 ஆம் திகதி தீர்ப்பளித்தது.



தமது கட்சி உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் சட்டத்திற்கு முரணானது என அமைச்சர்களான மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகி யோர் தாக்கல் செய்திருந்த மனுக்களை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. (அ)

# தமிழ் பொது வேட்பாளர் நோக்கத்துக்காக...

விடயங்கள் வருமாறு,

"காக்காண்ணை", என்று அறியப் பட்ட முத்துக்குமார் மனோகர் ஆகிய நான் மாவீரர் அறிவிழியின் தந்தை. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் போட்டி யிட வேண்டிய அவசியம் பற்றிப் போதுமானளவு விடயங்கள் மக்களிடம் முன்வைக்கப்பட்டாயிற்று. எனவே, மேற்கொண்டு ஆற்றவேண்டிய விடயங் கள் தொடர்பாக சிலவற்றை மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை இறுக்கமாகப் பற்றிக் கொண்டதால் மாவீரரான எமது செல்வங்களின் குடும்பத்தினரும் முன்னாள் போராளி கள் குடும்பத்தினரும் எப்போதும் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உறு துணையாக எமது மக்களும் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திர னின் சின்னமான சங்குக்கு வாக்களிக்கத் தவறாதீர்கள். இதனை உங்கள் தேசியக் கடமையாக உளமார ஏற்றுக்கொள்ளுங் கள். உங்கள், உறவினர், நண்பர்களி டமும் இத்தேவையை உணர்த்துங்கள்.

இறுதியுத்தம் முடிந்து 15 வருடங்க ளாகிவிட்டது. பேச்சுவார்த்தை, பேசுதல் என்பவற்றை தொடர்ந்து கேட்டு காது புளித்துப்போய்விட்டது. தமிழரின் ஆறாம் அறிவைக் கேள்விக்குட்படுத்தும் விதத்தில் புதுப்புது விளக்கங்களைக் கேட்டாயிற்று. எனவே, நாம் இனி அடுத்த கட்டத்தை ஜனநாயக வழியில் மேற்கொள்வோம். புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள எமது உறவுகள் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு தவறாமல் வாக்களிக்கும்படி தமது குடும்பத்தினர், உறவினர், நண்பர்களுக்கு அறிவுறுத்துங் கள். பொது வேட்பாளர் குறித்த விடயத்துக்கு சாத்தியமான - எவ்வகை யில் உதவ - பங்காற்ற முடியுமோ அந்த வகையில் பங்காற்றுங்கள்.

பா. அரியநேத்திரன் 1984ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அவரது சொந்தக் கிராமமான அம்பிளாந்துறை யில் எனக்கு அறிமுகமானவர். போராட்டப் பங்களிப்பு என்பதற்கு மேலாக கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயம் தொடர்பான விடயங்களில் இவரின் ஈடுபாட்டை நான் அறிவேன். அதனாலேயே, 2004 பொதுத் தேர்தலில் போட்டியிடத் தேர்வானவர்களில் ஒருவராக இவரின் பெயர் கிளிநொச்சியிலிருந்து அறிவிக் கப்பட்டது. இறுதி யுத்தத்தின் பின்னர் நெருக்கடிகளின் மத்தியிலும் மாவீரர் நினைவேந்தல்களை எப்படியோ தொடர்ச்சியாகச் செய்து வந்தவர்.

தமிழ்த் தேசியம் என்பதை வெறும் எதிர்ப்பு அரசியல் என்று கொச்சைப் படுத்தியவர்களும் உண்டு. ஆனால், எம்மை யார் என உணரவைத்து உணர் வோட்டத்தில் ஒன்றிக்கலக்க வைத்த விடயம் இது. இராஜதுரை வடக்குக்கு வருகிறார் என்றால் அவரது அழகு தமிழ் உரையைக் கேட்பதற்கு எத்தனை மைல் தூரமானாலும் துவிச்சக்கரவண்டியில் பயணிக்கும் அன்றைய இளைஞர்களை நான் சிறுவயதில் கண்டிருக்கிறேன். அன்றைய தமிழ் இளைஞர் பேரவை காலத்தில் பாசி என்றழைக்கப்பட்ட பாலிப்போடி சின்னத்துரையும் (அடுத்த கட்டபோராட்டத்தில் அவரது பெயர் யோகன் பாதர் - முள்ளிவாய்க்கால் வரை பயணித்தவர்) இன்னொருவரும் காசி ஆனந்தனின் பிறந்தநாளைக் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தனர். தந்தை செல்வாவுக்கும் அழைப்பு விடுக் கப்பட்டிருந்தது. அவர் தனியாக தனது பயணப் பொதியுடன் மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் வந்திறங்கினார். அவரைக் கண்டதும் இவர்கள் இருவரும் விழா நிகழ்ச்சி நிரலைக் குறிப்பிடும் துண்டுப் பிரசுரம் ஒன்றை வழங்கினர். அதனை வாசித்த தந்தையிடமிருருந்து ஒற்றை வரியிலான கேள்வி எழுந்தது. "இதில் இராஜதுரையின் பெயர் இல் லையே?" - அவ்வளவுதான் தான் ஏற்கனவே தங்கத் தீர்மானித்த இடத் துக்கு அவர் போய்விட்டார். குறிப் பிட்ட நிகழ்வில் பங்கேற்கவில்லை. அன்று மாலை கொழும்பு புறப்படும் தபால் புகையிரதத்தில் அவர் திரும்பி விட்டார்.

அவர் சொல்லாமலே உணர்த்திய விடயம் இதுதான் "தமிழ்த் தேசியத்துக் காக உழைத்த மூத்தவர்களை மதிக்காத செயலை நான் ஏற்கமாட்டேன்", என் பது. இவ்வாறான தலைமைத்துவப் பண்புதான் தமிழ்த் தேசியத்தின் அடி நாதம். அதனால்தான் தந்தை செல்வா வின் நினைவுத்தூபியில் தமிழரின் சகல மாவட்டத்தின் மண்ணும் ஒன்றிக்கலக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக் கப்பட்டது. இந்த வேண்டுகோளை ஏற்று கிழக்கு மாகாணம் அன்னமலை யிலிருந்து உழவு இயந்திரப் பெட்டியில் மண் கொண்டுவந்தனர் அந்த ஊர் மக் கள். வெறுமனே ஓர் அரசியல் கட்சியின் தலைவர் என்று தந்தை செல்வாவைப் பார்க்கவில்லை வட- கிழக்கு மக்கள் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

தமிழ்த் தேசியத்தை ஓர் அஞ்சலோட் டமாக யாழ். பல்கலைக்கழக மாண வர்கள் கொண்டு செல்கின்றனர். எல்லா நெருக்கடியான காலங்களிலும் அடுத் தடுத்த தொகுதியினரிடம் இந்த உணர்வைக் கடத்துகின்றனர். கடந்த 15ஆம் திகதி (வியாழக்கிழமை) தொழில் நுட்ப உதவியாளராக சூறாவளி வீசிய காலத்தில் மட்டக்களப்பில் பணியாற் றிய ப. திருக்கேதீஸ்வரன் அவர்கள் வெளியிட்ட "புழுதிக்கதைகள்" என்ற நூலின் வெளியீடு இடம்பெற்றது. அதில், சேதமடைந்த மன்னம்பிட்டி பாலத்தை யாழ். பல்கலைக்கழக மாண வர்கள் திருத்த உதவினர் என்ற விடயத் தைக் குறிப்பிட்டார். பின்னர், தேசியம் சார்ந்த எந்த நிகழ்விலும் யாழ். பல்க லைக்கழக மாணவர்கள் பங்கேற்றே வந் துள்ளனர். "அங்கையிருந்து இஞ்சை வந்து..." என்று அவர்களின் பங்க ளிப்பை கொச்சைப்படுத்தினார் சாணக் கியன்.

இரா. பரம[illegible] காலத்தில் மட்டக்களப்பில் [illegible] போராட்டங்களில் தியாகி சிவகுமார னும் சத்தியசீலனும் கலந்துகொண்டனர் என்ற வரலாறு இவருக்குத் தெரிந்திருக் காது. ஏனெனில், அப்போது இவர் பிறந்திருக்கவில்லை. இவரும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராக விஷ த்தைக் கக்குகிறார். 2004இலேயே அரிய நேத்திரனின் பங்கு எத்தகையதாக இருந் தது என்பதை தமிழ் அரசின் தலைவரும் துணைத் தலைவரும் சொல்லிக்கொடுக் கத் தவறிவிட்டனர்.

சம்பந்தன் ஐயாவுக்கு வயதாகிவிட் டது. அவர் பதவி விலகி அடுத்தவர்க ளுக்கு வழிவிட வேண்டும் என அமைப் பின் அங்கீகாரமின்றி சுமந்திரன் சொன்னபோது அவர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தவறியவர்கள் மூத்தவர்கள் தொடர்பாக (சிறீநேசன்) முறையற்ற விதத்தில் ஒருமையில் வார்த் தைப் பிரயோகங்கள் மேற்கொண்ட போது ஒழுங்கைப் பேணாதவர்கள் தந்தை செல்வாவின் அமைப்பின் பெய ரால் எந்த நடவடிக்கையும் எடுக்கத் தகுதியற்றவர்கள் - அமைப்பின் பெய ரால் சுமந்திரன் தன்னிச்சையாக மேற் கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக இதுவரை ஏழுக்கும் மேற்பட்ட தடவை கள் நடவடிக்கை எடுத்திருக்க வேண் டும். 1989 தேர்தலில் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன், ஆனந்தசங்கரி, யோகேஸ்வரன், போன்ற பிரபலங்களை தோற்கடித்தவர்கள் எமது மக்கள். ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகள் பெற்ற ஒருவரை இன்றுவரை வாக்க ளிப்பு மூலம் தெரிவு செய்யாதவர்கள் எமது மக்கள் என்பதை சாணக்கியனும் உணர்ந்து கொள்ளவேண்டும். மேய்ச்சல் தரை விவகாரத்தில் "மாடுகளுக்கு புல்லு வெட்டிப் போட முடியாதா?" என ஜனா திபதி தன்னிடம் கேட்டதாக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சாணக்கியன் சொன்னார். இதன் அர்த்தம் "மேய்ச்சல் தரையை ஆக்கிரமித்தவர்களை அகற்ற நான் தயாரில்லை", என்பதுதான். இப் போது ஜனாதிபதி பேச்சுக்கு அழைக்கி றார் என்றால் நாளாந்தம் எத்தனை தொன் புல்லுத் தர ஆயத்தமாக இருக்கி றார் என்றுதான் கேட்க முடியுமே தவிர, எப்போது இவர்களை அகற்றப்போகி றார் என்று பேச முடியாது.

மேய்ச்சல்தரை விவகாரத்தில் 24 மணி நேரத்துக்குள் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அகற்றப்பட்ட மாவட்டச் செயலர் திருமதி கலாமதி பத்மராஜா கண்ணீருடன் தன்னை அனுப்பி வைத்த மாவட்ட செயலக ஊழியர்களிடம் சொன்ன வார்த்தை களை சாணக்கியனுக்கு நினைவூட்டு கிறோம். "சோர்ந்து போகாதீர்கள்! சோரம் போகாதீர்கள்...!"

எல்லாவிதத் தடைகளையும் துரோகங்களையும் தாண்டி தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் முன்னோக்கிச் செல்வோம். புலம்பெயர் உறவுகளும் தாயகத்திலுள்ளோரும் கைகோத்து இதனை சாத்தியமாக்கு வோம் - என்றார். (ஐ)

## சஜித்...

தொடர்பில் சிந்திக்காது இத்தகைய தீர்மானத்தை எடுத்துள்ளார்கள் என்பது என்னுடைய நிலைப்பாடாகும். இது எதிர்காலத்திற்கு சிறந்த விடயம் அல்ல. இத்தகைய பின்னணியில் எனக்கு வாக்க ளித்த இரத்தினபுரி மக்களுக்கு துரோகம் இழைக்க நான் தயாராகவில்லை.

அத்துடன், பாராளுமன்ற த்தில் உள்ள ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் எதிர்காலத் திட்டங்களை திறம்பட முன்னெடுக்க என்னுடைய வாழ்த்துக்க ளையும் தெரிவித்துக்கொள் கின்றேன் - என்றார். (அ)

## வவுனியா...

வவுனியா வைத்தியசாலையில் பெண் ஒருவர் பிரசவத்திற்காக அனுமதிக்கப் பட்ட நிலையில் வைத்தியர் ஒருவரின் அலட்சியத்தினால் குழந்தை இறந்துள்ள தாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தனது மனைவி பிரவசத்திற்காக கடந்த 17 ஆம் திகதி வவுனியா வைத்திய சாலையின் 7 ஆம் விடுதியில் அனுமதிக் கப்பட்டதாகவும்

மறுநாள் அவருக்கான மருந்துகள் வழங்கப்பட்ட நிலையில் பிறந்த சிசு உயிரிழந்துள்ளதாகவும் முறைப்பாடளிக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் வெளியிட்டுள்ள காணொளி சமூக வலைத்தளங்களில் வெளியாகி வருகின்றது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் சமன் பத்திரனவை தொடர்பு கொண்டு வினவியபோது, சம்பவம் தொடர் பில் உள்ளக விசாரணைகள் முன்னெடுக் கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

## சுரேஷ்...

உறுப்பினரான வடிவேல் சுரேஷ் தொழில் இராஜாங்க அமைச்சராக ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலை யில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதேபோன்று, சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பின ரான அலி ஸாஹிர் மௌலானா அமைச் சரவை அந்தஸ்து இல்லாத அபிவிருத்தித் திட்ட அமைச்சராக பதவி ஏற்றுக் கொண்டார்.

இருவரும் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆத ரவை தெரிவித்திருந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

## சுயநிர்ணய...

என்று ஐக்கிய சோசலிசக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜய சூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணாமல் இலங்கையால் ஒரு அங்குலமேனும் முன்னோக்கிச் செல்ல முடியாது. பொருளாதாரப் பிரச்னை மட்டும் அல்ல, இனப்பிரச்னையும் பாரதூரமான பிரச்னையாகும்.

தேர்தல் நெருங்கும்வேளையில்தான் 13 பற்றி பேசப்படுகின்றது. இது நகைச் சுவைத்தனமான செயற்பாடாகும். மாகாணசபை முறைமை அமுலில் உள்ளது. அதன்மூலம் பிரச்சினை தீர்ந்ததா? குறைந்தபட்சம் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களாவது பகிரப்பட்டதா? இல்லை.

அவ்வாறு பொலிஸ், காணி அதி காரங்களை வழங்கி இருந்தால்கூட ஓர ளவு நம்பிக்கையை வென்றிருக்கலாம்.

ஜனாதிபதி வேட்பாளர்களில் இனப் பிரச்னைக்கான தீர்வு எம்மிடம் மட்டுமே உள்ளது. நாம் சுயநிர்ணய உரிமையை ஏற்கின்றோம். 13 தீர்வாக அமையாது, 13 இற்கு அப்பால் சென்று தமது எதிர்காலத்தை தீர்மானிக்கும் உரிமை தமிழர்களுக்கு வழங்கப்படும். ஸ்கொட்லாந்தில் போன்று இங்கு தீர்வு வழங்கப்படும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மொட்டு கட்சியின் காரியாலய பதாகை மாத்திரமே இருக்கும்!

## எஸ்.பி.திசாநாயக்க எச்சரிக்கை



கொழும்பு, ஒக. 22

மொட்டுக் கட்சியின் காரியாலய பதாகை மாத்திரம் இருக்கும் நிலை எதிர்காலத்தில் ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் உயர் மட்டத்தை எட்டியுள்ளதாக அவர் கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுயேச்சை வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்.

அதில் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரமே உயர் மட்டத்தை எட்டியுள்ளது.

அதற்கு காரணம் நாட்டின் நிலை தொடர்பில் உரிய வாறு ரணில் விக்கிரமசிங்கவே நன்கு அறிந்துள்ளார்.

அதுவும் பாரிய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்ட ஒருவர் ரணில் விக்கிரமசிங்க என்பதை அனைவரும் நன்கு அறிவர்.

மொட்டுக்கட்சிக்கு நேர்ந்துள்ள விடயத்தை இட்டு கவலை அடைகின்றேன்.

இன்னும் சிறிது காலத்தில் நெலும் மாவத்தையில் காரியாலய பதாகை மாத்திரம் இருக்கும் நிலைமையே ஏற்படும்.

எம்மிடமிருந்து எதிரணிக்கு சென்ற அனைவரும் மீண்டும் எம்முடன் இணைந்து கொண்டுள்ளனர் - என்றார். (அ)

# எதிர்க்கட்சியில் இணைந்த மொட்டு எம்.பி கருணாதாச

கொழும்பு, ஒக. 22

பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் கருணாதாச கொடித்துவக்கு எதிர்க்கட்சியில் இணைய தீர்மானித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான அவர் எதிர்க்கட்சியில் இணைய தீர்மானித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் விசேட உரை ஒன்றை ஆற்றிய அவர், நாட்டின் எதிர்காலத்திற்காகவும் நாட்டின் பொருளாதாரத்துக்காகவும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கவுள்ளதாக தெரிவித்தார். (அ)

# எம்பொக்ஸ் நோயை எதிர்கொள்ளத் தயார்!

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு




கொழும்பு, ஒக. 22

கடந்த வருடங்களில் இருந்ததை விடக் குரங்கு காய்ச்சலை எதிர்கொள்வதற்கு இலங்கை தற்போது சிறந்த முறையில் தயாராகி வருவதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்

குறித்த நோயினால் மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். (அ)

# நிறைவேற்று அதிகாரத்தை முற்றாக ஒழிக்கவேண்டும்!

## ஜனாதிபதி வேட்பாளர் ரொஷான் கோரிக்கை



கொழும்பு, ஒக. 22

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை அறிமுகமானது முதல்தான் இலங்கை கடுமையான பொருளாதார வீழ்ச்சியை நோக்கி சென்றதாக பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராக போட்டியிடுபவருமான ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

கறுப்புப் பணம் மற்றும் பாதாளக் குழுக்களின் பணமே இந்தத் தேர்தலில் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு சென்றால் இந்த நாடு அதல பாதாளத்துக்குள் செல்லும்.

நிறைவேற்று அதிகாரத்தால் எடுக்கப்படும் தீர்மானங்களில் எந்த வித ஆலோசனைகளும் பெறப்படுவதில்லை. அண்மைக்காலத்தில் கோட்டாபய ராஜபக்ஷ, பதவி துறந்துச் சென்றமை எம்முன் உள்ள சிறந்த உதாரணமாகும்.

உயர் நீதிமன்றத்தால் அறிவிக்கப்படும் தீர்ப்புகளைக்கூட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி நிராகரிக்கிறார். எனவே, இந்த முறையை முற்றாக ஒழிக்க வேண்டும்.

சிறிய நாடாக உள்ள இலங்கைக்கு 4 தேர்தல்கள் அவசியமற்றது. தேர்தல்களுக்காக பில்லியன் கணக்கில் செலவிடப்படும் நிதியை கல்விக்காகவும் பல்கலைக்கழகங்களை உருவாக்கவும் பயன்படுத்த முடியும்.

பிரதமரை தெரிவு செய்ய ஒரு தேர்தல் அவசியமற்றது. ஜனாதிபதித் தேர்தலையும் பாராளுமன்ற தேர்தலையும் ஒரே தடவையில் நடத்துவதற்கான முன்மொழிவுகளை வழங்கியுள்ளோம். தொகுதி வாரி முறை அறிமுகப்படுத்தப்பட்டு தொகுதிகளுக்கு பொறுப்புக்கூறும் எம்.பிகளை உருவாக்கவேண்டும்.

எப்போது, ஊழல், மோசடியானவர்கள் தொடர்பில் மக்கள் தெளிவாக இருப்பர். மாகாண சபைகள் அவசியமற்றது. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக அவற்றை கண்காணிக்கப்படவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மக்களுக்கு இந்த வாக்குறுதிகளை கொடுப்பார்களா? ஏன் என்றால், கருப்பு பணமும் பாதாள குழுக்களின் பணமும் அதிகமாக இந்தத் தேர்தலில் பயன்படுத்தப்படுகிறது- என்றார். (அ)

# சர்வதேச எரிசக்தி வலையமைப்புடன் இலங்கையை இணைப்பதற்கு முயற்சி!

## இந்திய பிரதித் தூதுவர் தகவல்



கொழும்பு, ஒக. 22

சர்வதேச எரிசக்தி வலையமைப்பில் இலங்கையை இணைப்பதன் ஊடாக இலங்கையின் மிகப்பெரிய பசுமை மூலங்களை பயன்படுத்தவும் முதலீட்டை ஈர்க்கவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய பிரதி தூதுவர் கலாநிதி சத்தியஞ்சல் பாண்டே தெரிவித்துள்ளார்.

கெரவலப்பிட்டிய 'சொபாதனவி' ஒருங்கிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையத்திற்கு திரவ இயற்கை எரிவாயு சேமிப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று முன் தினம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே கலாநிதி சத்தியஞ்சல் பாண்டே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு நிலையான எரிசக்தி வழங்கல் மிகவும் முக்கியமானது. எமது கூட்டு முயற்சிகள் இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்யும் என்பதில் முழு நம்பிக்கை எமக்கு உள்ளது.

இந்த முயற்சியானது, இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியின் முக்கிய அங்கமாக விளங்குகின்றது. ஆற்றல் செலவினங்களைக் குறைப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உலகளாவிய எரிசக்தி வலையமைப்பில் இலங்கையை இணைத்துள்ளோம். இதன் ஊடாக பிரதான எரிசக்தி பரிமாற்ற மத்திய நிலையமாக இலங்கையின் மிகப் பெரிய பசுமை மூலங்களை பயன்படுத்த முடியும். இதனால் நாட்டிற்கான புதிய முதலீட்டை ஈர்க்கவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எங்கள் தற்போதைய திட்டங்களில் எரிசக்தி வலையமைப்பு இணைப்பு, உட்கட்டமைப்பு இணைப்பு மற்றும் பல்உற்பத்திக் குழாய்களை நிறுவுதல் தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

சம்பூரில் சூரிய சக்தி மின் திட்டம் போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களிலும் முதலீடு செய்து வருகிறோம் - என்றார்.

# எந்த வேட்பாளருக்கும் ஆதரவு வழங்கவில்லை

## கத்தோலிக்க திருச்சபை அறிவிப்பு

கொழும்பு, ஒக. 22

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்த வேட்பாளருக்கும் தனது அங்கீகாரத்தை வழங்கப்போவதில்லை என இலங்கை கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை சந்தித்துள்ள போதிலும் எந்த வேட்பாளருக்கும் ஆதரவை வெளியிடப்போவதில்லை என கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

நாங்கள் எவருக்கும் அங்கீகாரத்தை வழங்கமாட்டோம் என கொழும்பு பேராயரின் பேச்சாளர் சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்தார்.

மக்களே தங்களுக்கு யார் வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும். நாங்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் நாட்டில் கத்தோலிக்க மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்த பேச்சுவார்த்தைகளில் மாத்திரம் ஈடுபடுகின்றோம் என அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, ஜே.வி.பியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார உட்பட பல ஜனாதிபதி வேட்பாளர்கள் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர்.

எந்த வேட்பாளருக்கும் ஆதரவளிக்காத போதிலும் கத்தோலிக்க மக்கள் தொடர்பான விவகாரங்கள் குறித்தும் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதியை நிலைநாட்டுவது குறித்தும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வோம் என சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org